# ஜகன்மோகினி

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.



3 APR 19

SC
211, N22JM
N44.2-1.
183087.

...INI," SINGAPERUMALKOIL.

ஜனவரி 1944.

4 ANNAS

ILLUSTRATED TAMIL MONTHLY

JAGANMOHINI.

இதழ் 1

திருவள்ளுவர்

...யைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


ESTD. 1923. Vol. 21. No. 1. Jan. 1944.

# க்ஷேமலாபங்கள்

அன்புடையீர் !

பொங்கல் புதுநாள் வரப்போகிறது. கீதாசாரியனின் திருவருளால் புதும புஷ்பித்துவிட்டது. இப்புதிய வருஷத்தில் அமோகமாகப் பால்பொங்கி, நாம் எல்லோரும் சகல சௌபாக்யங்களுடனும் சர்வ மங்களத்துடனும் இருக்கவேண்டுமென்று அவனடி தொழுது வேண்டுகிறேன்.

மோகினியின்பால் அன்புகொண்டு மலருக்காகவும், "மோகினி"க்காகவும் நான்கு மாதங்களுக்கு முன்பிலிருந்தே தமது பேராதரவைக்கொடுத்து எம்மை உற்சாகப்படுத்தி தைரியமளித்த எல்லோருக்கும் எனது ப்ரத்யேக வந்தனத்தை வெகு தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். "நேரில் பதிவு செய்துகொண்ட எல்லோருக்கும் விடாது மலர் அனுப்பும்படி பகவான் இம்முறை அருள்பாலித்து, சென்ற முறை உண்டாகிய குறையைத் தீர்த்துவைக்கவேண்டுமே!" என்று இரவு பகல் ப்ரார்த்தனை செய்தேன். அக்குறையை பகவான் தீர்த்தார்: எல்லோருக்கும் மலர் அனுப்பிவிட்டோம். ஏஜண்டுகளுக்கும் கூடுமானவரையில் குறைக்கவில்லை; ஒரு சிலருக்குத்தான் குறைக்கநேர்ந்தது. அக்குறையும் அடுத்த மலரில் நிவர்த்தியாகிவிடுமென்று நம்புகிறேன்.



ஆடவரும் பெண்டிரும் முழுமனத்துடன் தமது கட்டுரைகள், கதை முதலிய மலர்களால் கலைவாணியை அர்ச்சித்து பேரானந்தத்துடன் தொ

''நித்யானந்தர்''

## நடை முறையில் நாம் கொண்டாடுவது



183087
சென்னை-600 008

### ஆண்டாள் கனவு

மத்தளம்கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ்
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்து என்னைக்
கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்

**பி.ஸ்ரீ**

# கணவனும் தொழுத மனைவி

மனைவி கணவனைத் தெய்வமாகத் தொழவேண்டுமென்பது நமது இந்து மதக் கொள்கை. "தெய்வத்தையும் தொழமாட்டாள்; கணவனையே தொழுது எழுவாள்: அவளே கற்புடைய ஸ்திரீ. அவள் 'பெய்' என்று சொன்னால் மழைபெய்யும்!" என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆனால் ஒவ்வொரு விதிக்கும் விலக்கு இருக்கலாமல்லவா? "கணவனும் தொழுத மனைவி" இத்தகைய விலக்கு. இவர் யார் என்று சொல்லவும் வேண்டுமா? காரைக்காலம்மையார் என்று பிரசித்திபெற்ற தமிழ்ப் பெண் மணியை அறியாதவரும் உண்டோ?

காரைக்காலம்மையார் காரைக்கால் பேய்-ஆனார் - என்பது இவரது சரித்திர சாரம். "மனிதனைப் பிணம் தூக்கித் திரியும் பேய்" என்று குறிப்பிடுகிறார் ஒரு ஞானி. 'பேய்'என்றால் 'ஆத்மா': 'பிணம்' இந்த உடம்புதான். இந்தப் பிணச்சுமை பேயை மறைத்திருக்கிறதாம். நல்லது; பிணத்தை உதறித் தள்ளிவிட்டால், பேயாகிறோம்! மரணத்தால் அல்ல; ஞானத்தால் உதறித்தள்ளவேண்டும். மரணம் மறு பிறப்புக்குக் காரணமாய், வேறொரு பிணத்தை நம்மீது சுமத்திவிடுகிறதாம். ஞானத்தால் ஊனுடம்பு அல்லது ஸ்தூல சரீரம் என்ற சுமையை உதறிப் போனவர் காரைக்காலம்மையார் என்ற காரைக்கால்-பேயார். இவரை கணவன் தொழுத பிறகுதான் இவர் ஞான வைராக்கியங்களோடு "காரைக்கால் பேய்" ஆனாரென்றுபுராணம் சொல்லுகிறது. இக்கதையைச் சுருக்கமாகக் கூறுவோம்.

காரைக்கால் என்ற துறைமுகப் பட்டினத்தில் ஒரு பெருஞ் செல்வனான வியாபாரியின் மகளாய்ப் பிறந்து செல்வமாக வளர்ந்தவர் காரைக்காலம்மையார். இவருக்குப் 'புனிதவதி' என்பது பெற்றோரிட்ட பெயர்.


> பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
> சிறந்து, நின் சேவடியே சேர்ந்தேன்

என்று பின்னாளிலே சிவபெருமானை நோக்கி இவர் பாடியவண்ணம், இளமையிலேயே இவருள்ளம் உலகப் பொருள்களையாவது உலக இன்பங்களையாவது காதலிக்கவில்லை. அழகின் கொழுந்தாயிருந்த புனிதவதியார் பக்தியின் கொழுந்தாகவும் விளங்கினார். மணப் பருவம் வந்ததும் இவரைத் தந்தை, பரமதத்தன் என்ற ஒரு வைசியனுக்கு மணம்செய்து கொடுத்தார். கணவன் வியாபாரத்துறையில் பொருளை மேலும் மேலும் அதிகப்படுத்திவந்தான். புனிதவதியாருக்கோ சிவபக்தி மேலும் மேலும் அதிகரித்துவந்தது.

ஒருநாள் பரமதத்தனை வியாபார விஷயமாய்ப் பார்க்கவந்தவர்கள், அவனுக்கு இரண்டு அருமையான மாம்பழங்கள் கொடுத்துப் போனார்கள். அவன் அந்தப் பழங்களை மனைவிக்கு அனுப்பினான். அந்த வேளையில் அங்கே பசியால் வாடிக் களைப்புற்று வந்த சிவனடியார் ஒருவருக்கு அம்மையார் அந்தப் பழங்களில் ஒன்றை அளித்து, அவரை அமுது செய்வித்தார். பரமதத்தன் வழக்கம்போல் சாப்பிடவந்ததும் மிஞ்சியிருந்த ஒரு மாம்பழத்தை அவனுக்குக் கொண்டுவைத்தார் அம்மையார். நல்ல மதுரமான அந்தப் பழத்தைச் சாப்பிட்டுப்பார்த்து, "மற்றொரு பழத்தையும் கொண்டுவா," என்றான் வணிகன். அம்மையார் வருத்தத்தோடு சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு மெய்ம்மறந்து சிவபெருமானை நினைத்தார். அவர் அருளால் ஒரு மாம்பழம் வந்ததாம். அதைச் சுவைத்துப் பார்த்ததும், "இது

நான் அனுப்பிய கனியல்ல!'' என்றான் கணவன். திருவருளால் மாம் பழம் கிடைக்குமென்பதை அவனுடைய பகுத்தறிவு நம்பவில்லை. அந்தச் சந்தேகத்தைப் போக்குவதற்காகப் புனிதவதியார் வேறொரு மாம்பழம் வரவழைத்துக் கொடுத்தாராம். அவன் அதைக் கையில் வாங்கியதும்—ஆச்சரியத்திற்குமேல் ஆச்சரியம்!—அது மாயமாக மறைந்துவிட்டதாம். உடனே வணிகன் பயபக்தியோடு தன் மனைவியாரைத் தொழுதான், "இவரே தெய்வ''மென்று.

பிறகு அவன் வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்து வாழ்க்கை நடத்திவந்தான். புனிதவதியாரின் உறவினர் இவரை அவனிடம் அழைத்துப் போனார்கள். அவன் தன் புதிய மனைவியோடும் குழந்தையோடும் எதிர் கொண்டு வந்து, புனிதவதியாரின் அடிகளில் விழுந்து, "நாங்கள் உம்முடைய அருளால் இனிது வாழ்கிறோம்!'' என்று வணங்கினான்.



உடனே அம்மையார் சிவபெருமானைப் போற்றி, "கணவனுக்காக நான் தாங்கியிருந்த இந்த அழகுமிக்க உடம்பு இனி எனக்குத் தேவையில்லை: உன் அடிக்கீழ் இருந்து எக்காலமும் போற்றும் பேய்வடிவு தந்தருள வேணும்'' என்று பிரார்த்தித்தாராம். அப்படிப் பிரார்த்தித்துக் கொண்டே ஊன் நிறைந்த அழகை உதறியெறிந்து,

என்கிறது பெரிய புராணம்.

இப்படி ஞானவடிவம்பெற்றுக் காரைக்காலம்மையார், காரைக்கால் பேயானார் என்பது கதை. "ஆண்டவன் அறிந்துகொண்டால் போதாதா? உலகத்திற்கு நாம் எப்படியிருந்தாலென்ன?" என்ற மன நிலையோடு 'மானிடமல்ல!' என்று பிறர் எண்ணும்படி "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" ஞானப்பிறவியென்ற மறு பிறவியை இந்தப் பிறவியிலேயே பெற்று வாழ்ந்தார் காரைக்காலம்மையார் - என்பது கதையின் உட்பொருள். அன்பையெல்லாம் அழகனாகிய நடராஜமூர்த்திக்கே ஆக்கிச் சாதாரண உலகத் தொடர்பும் துன்பமும் அற்ற நிலையில் இந்த அம்மையார் திருவருளோடு ஒன்றுபட்டுப் பாடல்கள் பாடித் திரிந்தார் என்று கருதலாம்.

## அருளால் அழைத்த முக்கனிகள்


இந்தப் பாடல்களைத் 'திருவாலங்காட்டுப் பதிகங்கள்' 'இரட்டை மணி மாலை' 'அற்புதத் திரு அந்தாதி' என்ற மூன்று பிரபந்தங்களிலும் காண்கிறோம். இந்தப் பிரபந்தங்களில் இவர் அனுபவித்த பக்தியனுபவங்களும், அருள்-நெறியாகிய பெரு நெறியும், இவர் கண்ட சமய உண்மைகளும் அழகாகப் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. இவர் அருளால் அழைத்த மாங்கனிகள் இரண்டென்று கதை சொல்லுகிறது. இவர் வாழ்விலே கனிந்து வந்த மூன்று பிரபந்தங்களையும் இவர் அருளால் அழைத்த முக்கனிகள் என்று பாராட்டலாம், சிவ நேசர்கள் மட்டுமல்ல. தமிழன்பர்களும் ரஸிகர்களும்கூட இந்தப் பிரபந்தங்களை அப்படிப் பாராட்டக் கூடும். ஏனென்றால் இவருடைய பாடல்களில் பக்தியைமட்டுமல்ல; கவித்வ சக்தியையும் பார்க்கிறோம்; கவித்வசக்திக்கு இன்றியமையாத விசேஷ மனோபாவத்தையும் பார்க்கிறோம்.

> **இடர்களையா ரேனும், எமக்கிரங்கா ரேனும்**
> **படரும்நெறி பணியா ரேனும், - சுடர் உருவில்**
> **என்(பு) அருக் கோலத்(து) எரியாடும் எம்மானார்க்(கு)**
> **அன்[பு] அறுது என்நெஞ்[சு] அவர்க்கு!**

என்ற நிலையில் நல்ல மனோபாவத்தோடு எவ்வளவு உயர்ந்த கொள்கை எவ்வளவு தெளிவாக வெளியிடப்படுகிறது! பக்தி-உலகிலே வாணிபம் செய்யவிரும்பவில்லையாம் வாணிகமரபிலே தோன்றிய இப் பெண்மணி.

அம்மையார் பேய்வடிவு பெறுவதற்குமுன் அழகின் கொழுந்தாக விளங்கினாரென்றும், அன்பின் கொழுந்தாகி அந்த ஞானவடிவு பெற்றார் என்றும் சொல்லுகிறார்கள். ரூபசௌந்தரியத்தை வென்றுவிட்ட அந்த ஞான சௌந்தரியத்தையும், அன்பின் சௌந்தரியத்தையும் இன்னம் காணலாம் இவருடைய வாடா விளக்காகிய பிரபந்தங்களிலே. ஆத்மாவின் அழகு ஜொலித்தது பேய்வடிவிலே: அந்த அழகு இவர் உள்ளத்தை அழகு படுத்திய சிந்தனைச் சுடர்களோடு கொழுந்துவிட்டு எரிவதுபோல் எரிகிறது, இந்தப் பிரபந்தங்களாகிய ஞான தீபத்திலே.

சைவத்தையும் தமிழையும் வளர்த்த தாய்மாரில் காரைக்காலம்மையாருக்கு முக்கிய ஸ்தானம் உண்டு. இவர் ஏற்றிவைத்த அருள் - விளக்கு, பின்னாளில் சைவ சமயாசாரியர்களான திருஞானசம்பந்தர் முதலான பெரியோர்களுக்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக விளங்கியது; பின்னால்வந்த கவிகளுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது. எனவே, இந்த அம்மையார் பெயரையும் புகழையும் சைவ உலகமும் தமிழ் உலகமும் குலதனமாகப் போற்றிவருவதில் ஆச்சரியமில்லையே!


ஜனவரி
புது வருடப் பிறப்பு
பொங்கலோ பொங்கல்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்

# சகோதரிகளின் உரிமைகளும் கடமைகளும்

'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' என்று பாரதியார் பாடியிருக்கும் பாடல் பிரசித்தமானது. 'அச்சமின்மை' என்பது அரசியலுக்கு மட்டும்தான் என்பதில்லை. வேதாந்த விஷயத்திலும், அச்சமின்மை சொல்லப்பட்டிருக்கிறது. கீதையிலே பகவான் 'அச்சமின்மை'யை ஒரு தெய்வ சம்பத்தாகக் கூறுகிறார்.

பக்தனும் அச்சமின்மையினால்தான் பக்தியின் சுவையைக் காண முடியுமென்றால், கேவலம் சாதாரண கிரகஸ்தனுக்கு 'அச்சமின்மை' எவ்வளவு அவசியம் என்பது தெரியவில்லையா? ஜுரமிருந்தால் பால் ருசிக்குமா? அப்படியே உள்ளத்தில் பயமிருந்தால் உலக வாழ்க்கை கசந்து விடுவது சகஜம். அச்சமற்ற வாழ்வு ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாதது.

அச்சமின்மையை எப்படி அடைவது? ஞானமும் பக்தியும் முக்கிய அம்சம்தான். ஆனால் அவை எல்லோருக்கும் கிடைப்பது சுலபமா?

அரசியல்—சுதந்திரம் வேணுமென்பர் பலர். ஒரு நாட்டின் குடிகள் நல்வாழ்வு வாழ்வதற்கு அதுமட்டும் போதுமா! அறிவுத்துறையிலும், சமூகத் துறையிலும் சுதந்திரம் வேண்டியது அவசியம். இத்துடன் பொருளாதாரத் துறையிலும் சுதந்திரம் வேண்டும்.

'சுதந்திரம்' என்றால் சட்டத்தை மீறிக் கட்டுக்கடங்காமல் மனம் போனபடி நடப்பது என்பதல்ல. சட்டத்திற்கு உட்பட்டதே சுதந்திரம். 'சட்டப்படி நடந்தால் அச்சமின்றி வாழலாம்' 'Acting by law, we live without fear' என்று ஒரு ஆங்கிலக் கவி கூறியுள்ளார். ஆனால் அவர் சொன்னது இயற்கைச் சட்டத்தைக் குறிப்பிட்டு. நாம் இங்கே கவனிக்கப் போவது இயற்கைச் சட்டமல்ல: மனிதனால் மனித வர்க்கத்தைக் கட்டுப்படுத்த ஏற்படுத்திய சட்டமே, ஆனாலும் அந்தக் கவிமொழி, இந்தச் சட்டத்திற்கும் ஏற்றதே.

"சட்டம் நியாயமானது; ஜனங்கள் தாங்களே ஏற்படுத்திக்கொண்டது" என்று இருந்தால்தான் சட்டத்திற்கு உட்பட்டு உண்மையான சுதந்திர வாழ்வு கிடைக்கும். 'சட்டமில்லாத சட்டம்' தருமத்திற்கும் நியாயத்திற்கும் முரணான சட்டம் சுதந்திர விரோதிதான்! நாம் இங்கே சட்டப் புஸ்தகங்களிலுள்ள சட்டங்களைத்தான் பொதுவாகக் குறிப்பிடுகிறோம்.

சட்டம் பலவகைப்பட்டது. சமூகம், ஒழுக்கம், அரசியல் விஷயம், அறிவு விஷயம், மதவிஷயம் எல்லாவற்றையும் பாதிக்கக்கூடியவை. ஆகையால் கால தேச வர்த்தமானத்திற்கு தக்கபடி சட்டங்களைமாற்ற வேண்டியதும் புதுப்பிக்க வேண்டியதும் அவசியமாகும்.

டு இயற்கை சட்டத்தையோ கடவுளின் சட்டத்தையோ, நம்மால் மாற்ற னேந்து; ஆனல் மனித சிருஷ்டியான சட்டத்தை மனிதனுடைய முன் ...ிற்காகக் கால ரீதிப்படி மாற்றுவது முடியுமல்லவா?

மனித... செய்யும் சட்டம் ஒரு ஊருக்குச் சட்டமல்ல. சட்டமென்பது சமூ...கின் சட்டைபோன்றது. சமூக வளர்ச்சிக்கு ஏற்றபடி பெரிதோ, சிறிதோ ...க்கக்கூடியது என்பதை உணர்ந்தால்தான் சட்டத்தை தெரிந்துகொள்வதற்கும், அதன்படி ஒழுகுவதற்கும், மனம் வரும். ஏற்கெனவே உள்ள சட்டங்க... அறிந்துகொண்டால்தான், நம் வளர்ச்சிக்குத் தக்கபடி அவைகளைப் புதிப்பிக்கவோ, மாற்றவோ கூடும்.

பாமர ஜனங்கள் போலீஸைக் கண்டு பயப்படுவதும், புதிய புதிய சட்டங்களைக் கேட்டுப் பயப்படுவதும் சர்க்காரிடம் பயப்படுவதும் ஏன் என்றால் அவர்கள் சட்டத்தை அறிந்துகொள்ளாததே காரணம் என்ன லாம். சர்க்காரும் போலீஸாரும்கூட, சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடக்கின்றன என்பதை உணராமையினாலே எனலாம்.

அப்படியானால் வக்கீலைப்போல் எல்லோரும் சட்ட நிபுணர்களாக வேணுமா? அது முடியாத காரியம். ஆனால் ஒருவாறு சட்டத்தின் போக்கை அதன் சில முக்கிய அம்சங்களை, ஒவ்வொரு பிரஜையும் தெரிந்துகொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இல்லையென்றால், அவருடைய குடும்ப வாழ்க்கை மட்டுமன்றி, சமூகவாழ்வும் பாதிக்கப்படுகிறது. நமக்கு அளிக்கப்படும் கல்விப்பயிற்சியில், இதுவும் ஒரு அம்சமாகவேண்டியது அவசியம். ஏனென்றால், இத்தகைய ஸ்தூலமான சட்ட அறிவினால், ஒவ்வொருவரும் தத்தம் நிலைமையில் தமக்குள்ள உரிமைகள் என்ன, தாம் செய்யவேண்டிய கடமைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

கடமைகளை எல்லோரும் சுலபமாக நமக்குப்போதித்து விடுகிறார்கள். ஆனால் உரிமைகளின் பேச்சு வரும்போதுதான் சட்டத்தின் உதவி வேண்டியிருக்கிறது. கடமைகளைமட்டும் வற்புறுத்துவதில் என்ன பிரயோஜனம்! உரிமைகள் ஏற்பட்டால் தானே கடமைகளும் ஏற்பட்டுவிடும் என்பதை நம்மில் பலரும் உணர்கிறதில்லை.

நிற்க, ஒரு தேசத்திற்கு நல்ல பிரஜையாக இருக்கவேணுமென்றால், நம் கடமைகளைத்தெரிந்து வாழ்வைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எனினும் பிரஜா உரிமைகளைத் தெரிந்துகொள்ளாவிட்டாலோ, ஆயுள்முடியும்வரை பயத்துடன்கூடிய அந்த அரை குறை வாழ்வுதான் நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும்.

சிலர், "பெண்களுக்கு இதைப்பற்றி என்ன கவலை? தகப்பன், புருஷன், சகோதரன், பிள்ளை இவர்கள்மூலம் தெரிந்துகொள்ளக் கூடாதா!" என்பார்கள்.

பெண் இனத்தினரும் தேசப்பிரஜைகள்தானே ; அவர்களும் தமது கடமைகளையும் உரிமைகளையும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம் தானே—என்பது ஒருபுறமிருக்கட்டும், இந்தக்காலத்தில் 'தன் கையே தனக்குதவி' என்ற பழமொழி முன்னைவிட எவ்வளவு உண்மையாகிக் கொண்டுவருகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா ?

'அறியாமையைச் சுயநலம் பயன்படுத்திக்கொள்வது இயல்பு. சுயநலத்திற்கு முதல் தூண்டுகோலாக உதவுவது பிறர் அறியாமையே, சுயநலத்திற்குக் கண்ணுண்டா? பந்து, மித்திரன் என்று பார்ப்பதுண்டா? ஒருவனிடம் சுயநலம் உச்சநிலை அடைந்து விடுமேயானால், அதன் போக்குக்கு ஒருதடை சட்டஞானமேயாகும். சுயநலப்புலிக்குத் தன்னைவிடப் பிரதானமான பொருளும் உண்டோ உலகிலே ? ஆகையால், கல்வியறிவும் பண்பாடும் பொருந்திய ஒரு பெண்மணிக்குச் சட்டஅறிவும் ஒரு காப்பாக இருக்கவேண்டியதுதான்.

மங்கைப்பருவத்தில் தன் மனத்திற்கு உகந்த கணவனை கைப்பிடித்துப் புக்ககம்போகும் பெண்ணொருத்தி அந்தப்புதிய இல்வாழ்க்கையில், அந்தப்புதிய குடும்பத்தில், தன்னுடைய அந்தஸ்து என்ன? உரிமைகள் எவை? கடமைகள் என்னென்ன? என்பதைத் தெரிந்துகொண்டிருந்தால்தானே நல்லது? தாய் வீட்டிலிருந்து கொண்டுவந்த சீதனச்சொத்தை எப்படிப்பராமரிப்பது? விநியோகிப்பது எப்படி ? கணவனுடைய சொத்தில் தனக்கு என்ன பாத்தியதை உண்டு? துரதிர்ஷ்டவசமாக ஒருகால்

பிற்காலத்தில் கணவன் காலகதியடைந்து தானும் தன்னுடைய இளம் பிள்ளைகளுமாகத் தவிக்கநேர்ந்தால், தன்னுடைய நிலைமை என்ன? தன் குழந்தைகளுக்குத் தான் 'கார்டியன்' என்கிற ஹோதாவில், தான் நடந்து கொள்ளவேண்டிய முறை யென்ன? என்பதை அறிவதும் அவசியமாகிற தல்லவா? தந்தை வீட்டில் தன்னுடைய அந்தஸ்து என்ன? உரிமைகள் எவை என்பதை அறியவேண்டியதும், ஒவ்வொரு பெண்ணுக்கும் அவசியமே. இந்த உரிமைகளை அறிவிப்பன சட்டங்களே. எனவே அவைகளைச் சகோதரிகள் வேண்டும்போது பார்த்துப் பயன்பெறக்கூடுமென்று எண்ணியே ஸ்திரீகளுக்குத் தெரியவேண்டிய சில சட்ட அம்சங்களை 'மோகினி' ஆசிரியையின் கோரிக்கைக்கு இணங்கி, விளக்கி எழுத உத்தேசித்திருக்கிறேன். இந்த விஷயம் சகோதரிகளுக்கு ருசிகரமாகவும் உபயோகமாகவும் இருக்குமென்று நம்புகிறேன். மோகினியில் தொடர்ந்து படியுங்கள்.



குருகுலத்தில் சிஷ்யர்களின் பணி.

ஸ்ரீமான் வித்வான். கா. ப. வெங்கடகிருஷ்ணன்

# கம்பரும் ஆழ்வார்களும்

[இத்தலைப் பெயருடன் வித்வான் கா. ப. வெ. தொடர்ச்சியாய் எழுத முன்வந்திருக்கிறார். தமிழ்த்தெய்வத்தின் கவிக் கிரீடமாகிய கம்பர், ஆழ்வார்களின் அரும் பெருங்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டே தமிழிலக்கியத்தின் சிகரமென்றும், தமிழ்ப் பெருமக்களின் இதிகாசமென்றும் கருதப்படும் தமது காவியத்தை அமைத்திருக்கிறார் என்பது தமிழறிஞர் அறிந்ததே. ஆழ்வார்களின் அருட் பாடல்களில் கம்பரும் ஆழ்ந்து ஈடுபட்டவர். அவர்களுடைய பொருளேயன்றி மொழிகளும், இவரால் பொன்போல் போற்றப்படுகின்றன. முக்கியமாக, நம்மாழ்வாரின் சமயக்கொள்கைகளே கம்பரின் கொள்கைகள் என்று சொல்லிவிடலாம். உதாரணமாக, "உலகம் யாவையும்" என்று தொடங்கும் கம்பராமாயணத்தின் காப்புச் செய்யுளே ஸ்ரீராமானுஜாசாரியரின் ஸ்ரீ பாஷ்யத் தொடக்கத்தை ஞாபகப்படுத்துகிறது. ஸ்ரீ பாஷ்யத்திற்கும் அடிப்படை நம்மாழ்வாரின் தமிழ் வேதம்தானே!]

"தெய்வப் புலமைக் கம்ப நாட்டாழ்வார்" என்றும், "அபிநவ கவி நாதன்" என்றும், "கவிச்சக்கரவர்த்தி" என்றும் புகழ் பெற்றுள்ள கம்பரை நோக்கி, 'புலவரே! உமது இராமாயணப்பாடல்கள் கற்கக் கற்கத் தேனும் பாலும் கன்னலும்போல் இனிமை தருவனவாய் உள்ளனவே! நீர் கையாண்ட முறை யாது?" என்று சிலர் கேட்டார்களாம். கம்பர் "யான் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வோர் அகப்பை எடுத்துக்கொண்டேன்; அதுவே காரணமாகும்" என்றனராம். இவ்வாறு ஒரு கர்ண பரம்பரைச் செய்தி உண்டு.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருக்குறள், நாலடியார் முதலிய பழைய நூல்களின் மொழிகளும் அடிகளும், கருத்துக்களும் கம்பர் பாடல்களில் ஆங்காங்குப் பயின்று வருதல், கம்பராமாயணத்தைக் கவனமாகக் கற்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியவரும்.

கம்பர், அவ்வாறு தம் இராமாயணத்துக்கு இனிமையுண்டாகும்படி ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள பிரபந்தங்களிலிருந்து, எவ்வெவ்வாறு எவ்வெவ்விடங்களில் எடுத்து ஆண்டுள்ளனர் என்பதைக் காண்டந்தோறும் எமது சிற்றறிவிற்கு எட்டியவரையில் ஆராய்ந்து எடுத்து எழுதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. கம்பர் கண்ட கடவுள் உண்மை

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்: அன்னவர்க் கேசரண் நாங்களே. (பால. கடவு. வா. 1.)

உலகங்கள் எல்லாவற்றையும் தாமே உண்டாக்குதலும் காப்பாற்றுதலும் அழித்தலும் ஆகிய நீங்காத முடிவில்லாத விளையாட்டு உடையவராகிய அவரே, இந்த உலகங்களுக்கெல்லாம் முதன்மையான கடவுள் ஆவார்: அவர்க்கே நாங்கள் அடைக்கலம்.

இக்கருத்து, ஆழ்வார் அருளிச் செயல்களில் வந்துள்ளது என்பதை இனி நோக்குவோம்.

துன்பமும் இன்பமு மாகிய செய்வினையாய், உலகங் களுமாய்
இன்பமில் வெந்நர காகி இனியநல் வான் சுவர்க்கங் களுமாய்,

# கவியமுதம்

**ஸ்ரீ. சுவாமி சுத்தானந்த பாரதியார்**

தங்கத் தணல் போலே—நீலத்
தாரகை வானத்திலே
திங்கள் நகைக்கையிலே—கவித்
தீப் பொரியு தம்மா !

காற்றுடனே நிலவும்—மெல்லக்
கலந்து கொஞ்சையிலே,
ஆற்று மணல் வெளியில்—கவி
ஆடித் திரியு தம்மா !

ஊரடங் கும் நிசியில்—என்
உள்ளம் அங்கியதும்,
பேரடங்காக் கவிதை—என்னுள்
பேசித் தழுவதம்மா !

வெள்ளித் திரை வீசி— இயற்கை
விம்மிக் குதிக்கையிலே—என்னை
அள்ளுங் கவியமுதம்—அங்கே
ஆறயப் பெருகுதம்மா !

மின்னல் நடமாடும் — கார்
மேகத்தைக் கண்டு விட்டால்,
வண்ணக் கவி மயிலும்—என்
வாழ்வுடன் ஆடுதம்மா !

கண்ணனுடன் கலந்த—ஆன்மக்
காத லுயிர்ப்பினிலே,
எண்ணமெல்லாங் கவியாய்—இன்பம்
எழுந்து பொங்கு தம்மா !

---

மன்னுபல் லுயிர்களு மாகிப் பலபலமா யமயக் குக்களால் [னே.
இன்புறும் இவ்விளை யாட்டுடை யானைப்பெற்(று)ஏதும் அல்லல் இல
(திருவாய். 3-10-7.)

[செய்வினை. செய்யும்தொழில்கள், இன்பமில்-இன்பமில்லாத. மாயமயக்கு - உலகத்தினர் மயங்கும்படி தன் மாயத்தால்செய்யும் மயக்கச் செயல்கள். அல்லல் - துன்பம்.]

ஊழி முதல்வன் ஒருவனே யென்னும் ஒருவன் உலகெல்லாம்
ஊழி தோறும் தன்னுள்ளே படைத்துக் காத்துக் கெடுத்துழலும்
ஆழி வண்ணன் என் அம்மான். (திருவாய். 10-7-9)

[ஊழி-பூமி; யுகம். ஆழி வண்ணன் -கடல்நீரின் நிறமுள்ளவன்.]

என்ற இப்பாசுரங்களில் நம்மாழ்வாரும், "பல பல மாய மயக்குக்களால் இன்புறும் இவ்விளையாட்டுடையான்" என்றும், உலகங்களைப் "படைத்துக் காத்துக் கெடுத்துழல்பவன், என்றும், முதற்கடவுளைக் குறிப்பிடுதல் காணலாம். (தொடரும்)

ஸ்ரீ. சுவாமி சுத்தானந்த பாரதியார்

# கவியின் கவி

[மோகினி நேயர்களுக்கு ஓர் அரிய கலைவிருந்து. தமிழ்நாட்டுக் கவியோகியான சுவாமி சுத்தானந்த பாரதியார், கவிக்கலையைப்பற்றிய தமது நீண்ட அனுபவங்களையும், பாடல் நிகழ்ச்சிகளையும் நமது மோகினியில் மாதாமாதம் வெளியிட்டு வருவார். கவிதை மனிதசக்தியின் உன்னதமான விளக்கமாகும். உண்மையான கவிதை உள்ளத்திலிருந்தே மலருகிறது. உள்ளத்தில் அந்தராத்ம ஐக்கியத்திலிருந்து மலையூற்றுப்போலே எழுந்துவரும் மந்திரக்கவிதைகளே உலகில் நீடு நிலைத்து மனித சமுதாயத்திற்கும் வழிகாட்டத்தக்கவை. நேயர்கள் ஊன்றிப் படிக்க வேண்டுகிறோம். ஆசிரியை]

பல்லாண்டுகள் ஓடி மறைந்தன, எனினும் காலத்திரையை விலக்கிக் கொண்டு ஒரு நிகழ்ச்சிச்சித்திரம் என்முன் நிற்கிறது. திருநெல்வேலியில் முதல் கம்பர் திருநாள் நடந்தது. அதற்கு நானும் ஸ்ரீ வ. வே. சு. ஐயரும் சென்றிருந்தோம். புலவர் பலர் அழகான சொற்பொழிவாற்றினர். கூட்டம் முடிந்ததும், இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்றோம். அங்கேயும் அரிய புலவர்கள் எங்களுடன் அளவளாவக் கூடினர். ஐயர் கலைக்கனவிலேயே சொக்கியிருந்தார். நான் ஆற்றங்கரையின் அமைதியான வெண்ணிலாக் காட்சியில் மெய்ம்மறந்திருந்தேன்.

அகண்டாகாரமான மலர்வானம் என்மேல் விரிந்திருந்தது, அதன் உள்ளத்தைப் பாடுவதுபோல், பொருநைநதி சலசலத்துப் பாய்ந்தது... புலவர் பேச்சில் எனக்கு மனம் செல்லவில்லை. அவர்கள் "காளிதாஸன் அப்படிச்சொன்னான்; கம்பன் இப்படிச்சொன்னான், 'மில்தன்' எப்படிச் சொன்னான் தெரியுமா?" என்ற விவகாரத்தில் காலங்கழித்தனர். அவர்கள் பேச்செல்லாம் "கவிதை என்றால் என்ன? உண்மைக்கவிதை எப்படியிருக்கவேண்டும்?" என்பதையே ஆதாரமாகக் கொண்டது. ஆனால் ஒவ்வொருவரும் தாங்கள் படித்த கவிகளையே புகழ்ந்துகொண்டிருந்தனர். ஒருவருக்கு ஆங்கிலமே அதிகமாக வரும்; அவர் 'ஷேக்ஸ்பியர், மில்தனைத் தவிர உலகில் கவியே கிடையாது' என்பார். இன்னொருவருக்கு ஆரியமே வரும்; அவர் காளிதாஸனையும் வால்மீகியையும் பிடித்து உலுப்பித்தீர்ப்பார். இன்னொருவருக்குத் தமிழேதெரியும். அவர் சேக்கிழாரைப்போலுண்டோ என்று விவாதிப்பார்.

இன்னொருவருக்கு மூளை சாப்பாட்டிலேயே வேலை செய்துகொண்டிருந்தது. எங்களுக்குத் தேங்காயும் வாழைக்கனியுமே உணவு. நான் அங்கேயிருந்த மண்டபத்தில் தேங்காயை உடைத்துத் துண்டுசெய்து வந்து ஐயருக்குத் தந்தேன்... ஐயர் காளிதாஸரின் சாகுந்தலத்தில் வரும் அரிய கவிதை ஒன்றைச்சொல்லிக் கம்பனின் சீதைக்கும் காளிதாஸன் வர்ணிக்கும் சகுந்தலைக்கும் பொருத்தம் உண்டு என்று விளக்கினார்.

**ஸரஸிஜம் அனுவித்தம் ஸைவலேனாபி ரம்யம்,**
**மலினமபி ஹிமாம்ஸோர் லக்ஷ்ம லக்ஷ்மீம் தனோதி...**

இவ்வளவுதான் சொன்னார். "பாசி மூடினாலும் தாமரை வனப்பே, களங்கமும் திங்களுக்குக் கட்டழகளிக்கிறது......அதுபோல, வல்கலமும் சகுந்தலைக்கு அழகைத்தருகிறது...இனியமாதரை அழகுசெய்யாததெது!"—கிமவஹி மதுராணாம்மண்டனம் நாக்ருதீனாம்?...

இதுவே பாட்டின் பொருள். இதைச்சொல்லி ஐயர் "கவிச்சுவை எப்படியிருக்கிறது?'...என்றுநண்பரைப் பார்த்தார். 'ஐயரே இலைபோட்டுச்

சாப்பிடும் சுவை இந்தத்தேங்காய் பழத்திற்கு வருமா ஐயா?' என்றார் அந்த ஆள். அவர் மூளை சாப்பாட்டிலேயே சுழன்றுகொண்டிருந்தது... நண்பர் நாழியானது என்று பிரிந்தனர். உலகின் உறவெல்லாம் அப்படித் தானே. ஒரு ஒற்றனும் அங்கே கள்ளப்பார்வை பார்த்துச்சென்றான்.

நாங்கள் இருவரும் தனியே அந்த இரவைக்கழித்தோம்... தேங்காய் பழம் உண்டு, நீர் அருந்த ஆற்றிற்குச் சென்றோம்... "ஆ பாரதி! இந்தக் கவிதையைக்கேட்கட்டுமே" என்றார் ஐயர். அதைத்தானே கேட்டுக்கொண் டிருந்தேன். "உண்மைக் கவி இதுதான்" என்றேன்... உடனே ஐயர் "கவியெனத் தவழ்ந்த கோதாவரியினை வீரர் கண்டார்"... என்று கம்பன் வாக்கைச் சொன்னார்...

* * * *

நாங்கள் சிறிதுநேரம் அந்தத் தனி இயற்கையழகை உள்ளத்தில் அள்ளியணைந்து உலாவிக்கொண்டே கவிதைக்கலையைப்பற்றிப் பேசலா னோம்... அப்பேச்சின் சாரத்தைமட்டுமே இங்கே தரமுடியும்:—

மனிதசக்தியின் உச்சம் கவிதை. உண்மையான கவி, பல நூற்றாண்டு களுக்கொருமுறையே வருகிறான். வியாசர், வால்மீகி, சுகர், ஓமர், விர்ஜில், மில்டன், ஷேக்ஸ்பியர், கம்பன் இவர்களையே மகாகவிகள் என்னலாம். கவிதையென்பது மிகவும் அரியபொருள். அதிலும் இசையுடன் அமைந்த கவி வாழ்விற்குப் பேரின்பமளிக்கும்... இதோ இந்த ஆறுதான் உண்மைக் கவிக்கு உதாரணமாகும்... இது மிக்க உயர்ந்த பொதியமலையிலிருந்து இயல்பாகவருகிறது... இதற்கு யாரும் சிக்ஷை சொல்லித்தரவில்லை. இதன் பாட்டும் ஓட்டமும் ஒன்றே. அந்தப்பாட்டு உலகின் மேடுபள்ளங்களையும்; மலைக்கணவாய்களையும்அளந்து தாவித்தாவிச் செல்லுகிறது...செல்லும்வழி யிலேயே இது சுயநலமில்லாமல், அகம்பாவமில்லாமல் தன்னையேஉலகிற்கு வழங்குகிறது. எத்தனையோபேர் இதில் குளிக்கிறார்கள்; இதைக்கலக்கு கிறார்கள்: ஆனால் கலங்கா உறுதியுடன் இந்த ஆறு பாடிச்செல்லுகிறது, 'ஓம் ஓம்' என்று பாடிக்கொண்டே, ஓங்கார நடனம்செய்யும் அலைகடலில் இது கலந்துவிடுகிறது. மலையே இதன் மூலம். கடலே இதன் நோக்கம். கடலுடன் கலந்த ஆறு, அலைகளுடன் அலைகளாக ஆனந்த நடனம் புரிகிறது...கடலைக் கதிரொளி மேகமாக்கி மழைபொழிந்து, மீண்டும்ஆற்று வெள்ளம் வருகிறது... இதேமாதிரியே உலகில் ஜீவகவி வாக்கும் ஆகும். உள்ளத்திற்குள்ளம் தாவித் தவழ்ந்து, அனைத்தையும் ஒன்றுசேர்த்து சர்வாத்ம சமரசப்பொருளான இறைவனிடம் சேர்ப்பதே நல்ல கவி. அதுதான் அருட்கவி. அருளில்லாத சொற்சித்திரம் ஒரு போதைபோல விறுவிறுப்பளித்து மறையும். உலகில் நின்றுநிலைக்கும் உயர்ந்த கவிக ளெல்லாம் தெய்வச்சுவைபெற்றவை...

அக்காலத்திலும், இக்காலத்திலும், எக்காலத்திலும், மனிதாத்மா ஏதோ ஒரு நித்திய சுகத்தை நாடுகிறது. அதைத்தான் ரசிகன் கலையில் தேடுகி றான். கலையானது கவிதை, பாட்டு, சித்திரம், சிற்பம், நடனம், நாடகம் ஆகிய பல அழகுருக்கொண்டு விளங்குகிறது. ஆனால் கலையின் எல்லை ஒரு மட்டுக்குப்பட்டதேயாம். அதைப் பயன் படுத்தி உள்ளத்தைப் பண்படுத்த லாம். பண்பட்ட உள்ளத்தால் ஆத்ம சுகத்தைத் தரும் இறைப் பொருளை ஒருவாறு உணரலாம். இதுதான் கலையின் பயன் என்பது அருட்கவிகளின் முடிவு.

* * * *

உலகில் கவிகள் பலவகையினராவார். அவர்களுடைய மனோதர்மத் திற்கேற்றபடி கவிகளும் பல வகையாகும். ஞானத்தில் முதிர்ந்த அனுபவ

யோகி, தன்னுள் உதிக்கும் தெய்வக் காட்சியைத்தான் பாட விரும்புவான். அவனுக்கு ஸைகிள் மோட்டார் பாட்டு வராது. கள்ளுக்கடை மறியலுக்குப் போகிறவன் "கள்ளைக்குடிக்காதீர்கள் தோழர்களே!" என்றுதான் பாட விரும்புவான். அவனுக்குக் கம்பனும் காளிதாஸனும் வெறும் கலைக்கன வாளிகளாகத் தோன்றுவார்கள். ஒரு நாள் நாங்கள் கம்பனை ஆராய்ந்து கொண்டிருந்தோம். ஒரு நண்பர் வந்து "இதெல்லாம் என்ன வீண் பொழுதுபோக்கு? கம்பனைக்கொண்டு ஜவுளிக்கடை மறியல் பண்ண முடியுமா?" என்றார். அவர், அவர் நிலையிலிருந்து பேசுகிறார். பகவானை ஸ்தோத்திரம் செய்யத்தான் சிலர் கவியை நாடுவர். அவர்களுக்கு அர்ச்சனைப் பாட்டுகளும், திருமுறைப் பாடல்களுமே விருப்பமாகும். "ஸஹஸ்ர நாமம் என்ன பாட்டு; காளிதாஸனுக்கு இணை வருமோ?" என்று நாம் சொல்லக்கூடாது.. ஒரு துறவிக்கு, கம்ப ராமாயணம் நீர்விளையாட்டுப் படலம் பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக 'கம்பன் என்ன கவி? தாயுமானவரே கவி' என்னலாகாது...கவிச் சக்கரவர்த்தியான கம்பன் ஒரு சமயம் ஆழ்வார் பாசுரமே உண்மைக்கவிதை என்று சொன்னான். அவன் சொன்ன அழுத்தமான வார்த்தைகளைப் பாருங்கள்.

ஈயா டுவதோ கருடர்க் கெதிரே?
    இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ?
நாயா டுவதோ உருமிப் புலிமுன்?
    நரி கேசரிமுன் நடையா டுவதோ?
பேயா டுவதோ அழகூர் வசிமுன்?
    பெருமா னடிசேர் வகுளா பரணன்
ஓரா யிரமா மறையின் தமிழின்
    ஒருசொற் பெறுமோ உலகின் கவியே?

"கண்ணன் கழலிணை" என்ற ஆழ்வார் பாசுரமே உலகக் கவிகளை வென்று சங்கப்பலகை ஏறியதாம்...

கவி என்பது என்ன, அதன் பயனென்ன, எதற்காக மனிதனுக்கு இறைவனே கவியாற்றலைத் தந்தான்? அதை மனிதன் எப்படி மனம் போனபோக்கில் துர்விநியோகம் செய்து அகங்கரிக்கிறான் என்பதை 'நம்மாழ்வார்' தெளிவாகச் சொல்லுகிறார்:-

கொள்ளும் பயனில்லை...குப்பை
    கிளர்த்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்து நும்வாய்மை
    இழக்கும் புலவீர்காள்!
கொள்ளக் குறைவிலன் வேண்டிற் றெல்லாம்
    தரும் கோதில் என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்
    கவிசொல்ல வம்மினோ!

"வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியல்லேன்" என்று அழுத்தமாகச் சொல்லுகிறார் கவியோகியான நம்மாழ்வார்...கம்பன், நம்மாழ்வார் இருவரும் கவிதையின் அடிமுடி கண்ட புலவர்கள். கம்பன் கலைக்கவி. நம்மாழ்வார் அருட்கவி...இருவரும் கவிக்கலையின் அழகையும், ஆதர்சத்தையும் நிறைவாக விளக்கும் தெய்வப்புலவர்களாவார்.

* * * *

கவிதையை உணரும் ரசிகர் பலவகையாவார்...என்று நாங்கள் பேசும்போதே, யாரோ நாடகம் பார்த்துவிட்டு ரஸ்தாவழியே "எடுத்து வைக்கும் கால்களுக்கு சாமி தில்லலே, எருக்கலம்பூச் சல்லடமாம் கோமித் தில்லாலே" என்று பாடிச் சென்றான். "சவாசண்ணே" என்று அதற்கு

இன்னொருவன் தாளம்போட்டுச் சென்றான்... ஐயர் "அதோ அவனுக்கு அவனது நிலையில் 'சாமிதில்லாலே'தான் பாட்டாகத் தோன்றுகிறது. அவனிடம் ஆழ்வார் பாசுரத்தையோ கம்பனையோ காட்டினால் என்ன வாகும்?" என்றார்.

கவிகளைப்போலே ரசிகரும் பலவகை. சிலர் அர்ச்சனைக் கவிகளில் காளிதாஸன் இல்லையே என்று இகழ்வார்கள். சிலர் நாடகப்பாட்டே விரும்புவார்கள். சிலருக்கு இசைப்பாட்டே பிரியம்; விருத்தங்கள் பிடிக்கா. சிலர் இசையை வெறுப்பர். நல்ல விருத்தங்களையே உகப்பர். சிலருக்கு விஷ்ணுபரமான பாசுரங்களே பிடிக்கும். சிலருக்குத் தேவாரம் பெரிய புராணம் என்றால் பிடிக்கும்...சிலருக்கு கணகணவென்று, சொல்லோட்டமிருந்தாலே போதும். சிலருக்கு ஆழ்ந்த பொருள் வேண்டும். சிலர் பொழுதுபோக்கிற்காகவே கவிதை விரும்புவர். சிலர் பொழுதைக் கொலை பண்ணி 'அது லொட்டு, இது லொசுக்கு' என்று பழி தூற்றிக்கொண்டு, பிறர் மனசைப் புண்படுத்துவார்கள். சிலருக்கு வாய்வாதமே பிரியம். அவர்கள் தோட்டத்தில் கனி எண்ணுவார்கள்; உண்ணமாட்டார்கள். அப்பத்தில் தொளையெண்ணி, "இதென்ன அப்பம், முப்பது தொளைகூட இல்லையே" என்பார்கள். சிலர் "அப்பம் சரியான வட்டமில்லையே" என்று கோட்டுக் கணிதம் பார்ப்பார்கள். உண்மையான ரசிகன் அப்பத்தையும் தோட்டக் கனியையும் ஆவலாக உண்டு பசியாறுவான்...ஆதலால் உண்மையான கவிகளும் அவரவர் காலத்தில் கிளம்பும் எதிர்ப்புகளையும் கிண்டல்களையும் பாராட்டாமல், தமது கடமையை உண்மையாகச் செய்து செல்வார்கள்.

துளசிதாஸர், இராமாயணம் பாடத்தொடங்கியபோது அதற்குப் பலமான எதிர்ப்பிருந்தது. பாடி முடிந்தபிறகு "இதென்ன கவி! பாவமில்லை; அதில்லை இதில்லை" என்று சிலர் பழி தூற்றிக்கொண்டிருந்தனர். துளசிதாஸர் இவர்களைப்பார்த்துச் சொன்னார்.

"சாதுக்களுக்கு நான் வணங்கியபிறகு, என்னைக் குறைகூறும் அசாதுக்களுக்கும் பெரிய கும்பிடு போடுகிறேன். பிரம்மதேவன் உலகில் நல்லது பொல்லது, சுகம் துக்கம், நட்பு பகை இரண்டையுந்தான் படைத்திருக்கிறான். இகழ்ச்சி புகழ்ச்சி இரண்டும் உலகின் இருவிகார நாடகம். இரண்டிலும் ஒட்டாதிருப்பவனே பாக்யவான். உலகில் அவரவர் இயல்பிற்கேற்றபடி போற்றுவர், தூற்றுவர். வேடன் வீட்டுக்கிளி 'வில், நாய்' என்றுதான் பேசும். வேதியன் வீட்டுக்கிளி வேதமொழி பேசும். அவரவர் மனப்பான்மை சொல்லில் வருகிறது. அசாதுக்கள் எனது குறைகளைச் சொல்லுகிறார்கள். நல்லது; நான் திருத்திக்கொள்ளுகிறேன்...அவர்களே எனக்கு விளம்பரமாகவும் இருக்கிறார்கள்."

* * * *

இந்தமாதிரிப் பேச்சு நிகழ்ந்தபிறகு, ஐயர் ஆற்றுமணலில் படுத்துக் கொண்டார். நான் சிறிது தள்ளியிருந்து, ஆழ்ந்து தியானித்தேன். "என்னுள் யார் பாடுகிறான்? உண்மைக்கவி யார்?" என்பதுதான் எனது தியான சாரம்...

காலையில் நாங்கள் அனுஷ்டானங்களை முடித்து, அருணேதய தரிசனத்தைக் காண நெல்லையப்பர் கோயிலுக்குப்போனோம். ஐயர் கோவிலிலுள்ள சிற்பச் செல்வத்தைப் பரவசமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்...நான் அங்கே பாடிய தேவாரப்பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன்...சுவாமிக்குக் காலை தீபாராதனையானது...அப்போது ஒருவர் "இன்னேனக்கருளி" என்ற திருவாசகத்தை இனிமையாகப்பாடி நெல்லையப்பர் முன்னிலையில்

"அப்பனே என் மனக் கல் கரையாதோ"...என்று உருகிக்கொண்டிருந்தார். எங்கள் மனமும் உருகியது...நான் சுவாமிமேல் ஒரு பாடல்பாடி வணங்கினேன். ஐயர் பிராகாரத்தை வலம்வந்துகொண்டே, "பாரதி! அதுதான் கவிதை" என்று, அதையே பாடச்சொன்னார்.

**இன்றெனக் கருளி, இருள் கடிந்துள்ளத்**
**தெழுகின்ற ஞாயிறே போன்று,**
**நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;**
**நீயலாற் பிறிதுமற் றின்மை,**

**சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்**
**திருப்பெருந் துறையுறை சிவனே,**
**ஒன்றுநீ அல்லை...அன்றி ஒன்றில்லை**
**யார் உனை அறியகிற் பாரே!**

என்று பிலகரி ராகத்தில் பாடினேன்.

ஐயர் "ஆஹா!...யார் உனை அறியகிற்பாரே" என்பது எவ்வளவு அழுத்தமாக விழுந்திருக்கிறது!...அந்த அறிவிற்கு "மாணிக்கவாசகர்" அமைக்கும் படிகள் எவ்வளவு உருக்கமாயிருக்கின்றன!...இதுதான் கவி...இதன் பெருமையை யார் அறிவார்? சாதாரணமான புத்தகப் புலவர் அருட்கவிகளின் உள்ளத்தை எப்படி யறிவார்கள்?...அதற்குப் பக்குவம் வேண்டும்...இன்று நான் உண்மைக் கவியைக் கேட்டேன்... கம்பனையும் வள்ளுவனையும் இப்படி அனுபவித்தாலே உண்மைக் கலை விளங்கும்" என்றார்...மறுபடியும் ஒரு சிலைமுன் நின்றார். "பாரதி! எல்லாருந்தான் கோவிலுக்குள் வருகிறார்கள். சிலர் தூணில் உள்ள சிற்பத்தையே பார்த்துச் செல்கிறார்கள். சிலர் கோயில் சேவகரை அதிகாரம் பண்ணவே வருகிறார்கள். அது சொட்டு, இது சொள்ளை என்கிறார்கள். சிலர் விநியோகத்திற்காக ஆவலாக வருகிறார்கள். அது கிடைத்ததும் தின்று தூணில் துடைத்துச் செல்கிறார்கள். இங்கே அழகான சிற்பச் செல்வங்களில் அவர்கள் தடவிய எண்ணெய் மெழுக்கு 'கலைவிஷயத்தில் நாம் எவ்வளவு அஜாக்ரதையாயிருக்கிறோம்' என்று காட்டுகிறது...சிலர் 'கோயிலாவது சாமியாவது எல்லாம் புரட்டு' என்கிறார்கள். சிலருக்குக் கல்லிலும் கடவுள் காண்கிறது...அவர்கள் உள்ளத்தை உருக்கிச் சந்தனாபிஷேகம் செய்து, இறைவனருளையே பெற முறையிடுகிறார்கள். அவர்கள் உள்ளத்தில் எழும் ஆர்வமே கவிதை...அருட்கவிகளுக்கெல்லாம் அந்த ஆர்வக்கனலே கவிச்சுடர்களாக வெடித்துவந்தன...உட்கண் இருப்பவர்களுக்கே சுடரொளி புலனாகும்...மற்றவர்கள் அவரவர் அபக்குவ நிலைக்கேற்றபடி, ஒன்றைப்போற்றலாம் தூற்றலாம்...மதிக்கலாம் மிதிக்கலாம்... நமது குருகுலத்தையே பார்த்துக்கொள்வோம்...இந்த ஸ்தாபனத்தைச் சுற்றி எவ்வளவு புயல் வீசுகிறது! இதுபோலத்தான் கலையைச் சுற்றியும் வீசுகிறது. உண்மையான கவி தனது கடமைகாத்துச் செல்கிறான்" என்றார்.

இந்தச் சம்பவம் எனது கவியோட்டத்திற்கு நல்ல புதிய வேகமளித்து அதை உண்மை வழியில் திருப்பிவிட்டது...அன்று ஆற்றங்கரையில் எழுந்த கவிதையை மோகினி நேயருக்கு அன்புமலராகத் தருகிறேன். எனது கவிகள் பல சந்தர்ப்பத்தில் பல உணர்ச்சிகளுடன் பாடப் பெற்றவை. ஒவ்வொன்றின்பின்னேயும் ஒரு சம்பவம் உண்டு. அவற்றின் மூலம் கவிக்கலையின் இலக்கணத்தையும் நேயர்கள் அறியலாம்.




## புல்லாங்குழலே

கல்லும் புல்லும் உருகக் கானில்
    கண்ணன் ஊதும் புல்லாங் குழலே
கள்ளக் கண்ணன் மாயம் எல்லாம்
    சொல்ல வேணும் புல்லாங் குழலே

கண்ணால் கண்ணி வைத்துக் கானில்
    பெண் மான் பிடிக்கத் துள்ளித் திரியும்
கண்ணன் கண்ணில் கொண்ட மாயம்
    கண்டு சொல்லாய் புல்லாங் குழலே!

வாயின் கனியும் மலரும் காட்டி
    வண்ணப் பேடை வண்டைப் பிடிக்கும்
ஆயன் அளிக்கும் முத்தச் சுவையை
    ஆய்ந்தே சொல்லாய் புல்லாங் குழலே!

காடு மலையில் பேடை மயில்கள்
    ஓடி வந்து வாடி நிற்க
ஆடும் நீல அழகைக் கூட
    நாடி வழிசொல் புல்லாங் குழலே!

-ஸ்ரீமான் பி. ஆர். ராஜசூடாமணி.

# உதய சூரியன்



வை.மு.ஸ்ரீனிவாஸன். எம்.ஏ. பி.எல்.

ஸ்ரீ

# உதய சூரியன்

## மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம்

"உலகளந்த உத்தமா! உன் லீலாவிநோதங்களின் அருமையை என்னென்பது? உன்னை எத்தனை ரூபங்களில் கண்டு பணிகின்றோம்! உன் ஜோதிஸ்வரூபத்தை சூரியனுக்குக்கொடுத்தாய். சூரியனாகத் தோன்றி உலகுக்கு ஒளியும், உயிரும் தருகின்றாய். பொழுது புலரும்தருணம் உன் அழகை இயற்கையன்னைக்குக் கொடுத்து சோபிக்கச்செய்கிறாய். இவ்வழகை இன்றல்லவா நான் அனுபவித்து மெய்ம்மறந்து நிற்கிறேன். இத்தனை நாளாக தினமும் காலையில் அரண்மனை காயகிகள் பாடி எழுப்பட்டுமென்று சங்கீதப்பிரியத்தால் இவ்வழகைக் காணாமலே இருந்துவிட்டேன். ஆழ்வார்கள் இதை எவ்வளவு அனுபவித்துத் "திருப்பள்ளியெழுச்சி" பாடினார்கள்.

கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான்
கனையிருளகன்றதுகாலையம்பொழுதாய்
மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம்
வானவரரசர்கள்வந்துவந்தீண்டி
எதிர்திசைநிறைந்தனர்இவரொடும்புகுந்த
இருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும்
அதிர்தலில்அலைகடல்போன்றுளதுஎங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. —திருமாலை.

என்றெல்லாம் சூரியோதய சமயத்திலுள்ள இயற்கையழகில் ஈடுபட்ட "மங்களபுரி" மன்னன் கருணாகரன் தன் மனத்திற்குள் எண்ணியவனாய் நின்றிருந்தான்.

"தினமும் தான் சூரியன் உதயமாகிறான், இதே சிறப்புடன். இருந்தாலும் இன்றுதான் எனக்கு என்றுமிலா உத்ஸாகமும், சூரியனைப் பணியவேண்டுமென்ற எண்ணமும் தோன்றுகின்றன. உதயசூரியன் நிமிடத்திற்கு நிமிடம் அதிக சிறப்பும் ஒளியும் பெறுவதுபோல் நம் மங்களபுரியும் அவனருளால் சிறந்து விளங்க வேண்டும். பொதுநன்மைக்காகவும், கலையபிவ்ருத்திக்காகவும் சிறிதும் சலிப்பின்றி என்னாலியன்றதை என் மக்களுக்குச்செய்து தான் வருகிறேன். அவர்களுக்கிருக்கும் ஒரே குறையையும் சீக்கிரமே தீர்த்திடுவாய் ஜோதிஸ்வரூபனே!" என்று மனதார வேண்டிக்கொண்டிருந்தான்.

"ஒரே குறை" என்று மன்னன் குறிப்பிட்டது யாதெனில் பட்டத்திற்கு இளவரசன் பிறக்காததுதான். கருணாகரனுக்கு இரண்டு புத்திரிகள்தான் உண்டு. ஜனங்களின் உள்ளத்தில் மிக்க அன்புடன் உன்னத ஸ்தானத்தைப் பெற்றிருந்த அவனுக்குப் புத்திர ரத்தினம் பிறக்காமலிருந்ததுதான் எல்லோருக்கும் குறையாகவிருந்தது. அது தவிர, ஜனங்களுக்கு வேறு எந்தவிதத்திலும் குறைவில்லை. குறை எப்படி இருக்கமுடியும் அந்த தர்ம

ராஜ்யத்தில்? அந்த ஒரு குறையும் தீரும் காலத்தை பகவான் அருளிவிட்டதாகவே அவர்கள் எண்ணினார்கள். ராணியாருக்கு அந்த மாதம்தான் பிரசவ காலம்; இம்முறை கட்டாயம் புத்திரன் தான் பிறப்பானென்று எதிர்பார்த்தார்கள். பிரார்த்தனையும் செய்துகொண்டிருந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

மன்னன் மனங்குளிர சூரிய வணக்கத்திலீடுபட்டிருக்கையில் மைத்ரேயி "மஹாராஜா! சுப சமாசாரம்! ராணியாருக்கு சுகப்ரசவமாயிற்று! மங்களபுரிக்கு இளவரசர் அவதாரமாகிவிட்டார். அழகே அவதாரமென்று சொல்லலாம்! இன்றுதான் பத்தாம் மாதம் பிறந்தது; பிரசவமும் சுலபமாகவே ஆகிவிட்டது!" என்று மூச்சுவிடாமல் குதூகலத்துடன் தெரிவித்தாள். அழகின் அளவை அன்றே அறிந்த அரசன் அமிர்தம்போன்ற அச்செய்தியை அளவற்ற ஆனந்தத்துடன் வரவேற்று "மைத்



ரேயி! இப்பேர்ப்பட்ட சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டுவந்த தற்காக இந்த விலையுயர்ந்த மோதிரத்தைப் பரிசாக ஏற்றுக் கொள். உதயசூரியனின் அழகில் ஈடுபட்டிருக்கையில் நம் மங்கள புரிக்கே சூரிய உதயமாகிவிட்ட செய்தியைக் கொண்டுவந்தாய்! இன்றே நம் மக்களுக்கு மன நிம்மதி ஏற்படும். உடனே நமது குரு ஸ்ரீவத்ஸரை வரவழையுங்கள். குழந்தை பிறந்தவேளை எப் பேர்ப்பட்டதென்பதையும் அறிந்துகொள்ளலாம்...மைத்ரேயி! எக்காரணத்தினாலும், இந்த மோதிரம் உன்னைவிட்டுப்போகலா காது. என் தலைமுறைக்குப் பிறகுகூட, உன் உடலில் உயிரிருக்கும் வரை இந்த மோதிரம் உன் கையை அலங்கரிக்கட்டும்; உன் ராஜ பக்திக்கு என்றென்றும் இது அடையாளமாக விளங்கட்டும்" என்று தெரிவித்தான்.

மைத்ரேயியின் மனம் ஏற்கனவே நிறைந்திருந்தது; இப் போது பூரித்துவிட்டது...ஸ்ரீவத்ஸரும் வந்தார். "மங்களமுண் டாகட்டும்! மகாராஜா! மங்களபுரியே ஆனந்தக் கூத்தாடுகிறது இன்று!" என்று ஆரம்பித்தார்.

"ஸ்வாமி! எல்லாம் அவன் அருளும், தங்களைப்போன்ற பெரியோர்களின் ஆசீர்வாதமும்தான். கடவுள் க்ருபையால் இப் போது பிறந்திருக்கும் குழந்தை எப்படியிருக்கும்? ஜாதகம் எவ் வாறு அமைந்துள்ளது என்பதைக் கவனித்துத் தெரிவிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

"அதைச் சொல்லத்தான் ஆவலுடன் வந்திருக்கிறேன். நம் மக்கள் செய்த புண்ணியத்தால் உத்தம ராஜனாக உன்னை அடைந் திருக்கிறார்கள். உன் தெய்வபக்தி, பாகவத ஆராதனை. தர்ம சிந்தனை, கலை ஆதரவு, பக்ஷபாதமற்ற நீதி பரிபாலனம் முதலிய வற்றிற்குப் பரிசாக பகவான் உனக்கு அரிய புத்திரனை அளித் துள்ளார். அவன் பிறந்திருக்கும் வேளை மிகச்ரேஷ்டமானது. அதாவது சூரிய பகவான் சாரத்யம் செய்ய ஆரம்பிக்கையில் க்ரீடத்தை எடுத்துத் தலையில் வைத்துக்கொள்ளும் சமயத்தில் பிறந்திருக்கிறான். அதன் விசேஷம் இவனுடைய க்ரீடம் என் றென்றும் சிறந்து சரித்திரப் பிரசித்தியுடன் விளங்கும். தவிர பரணியில் பிறந்திருக்கும் இவன் தரணியாளப்போகிறான். இவன் ஜாதகத்தில் சூரியன் நிரம்பவும் அனுகூலமானவன். உதய வேளை யில் நம் மங்களபுரிக்கே சூரியனாக உதயமாகியிருக்கும் இளவரச னுக்கு உதயபாஸ்கரன் என்றே நாமகரணம் செய்யவேண்டும்." என்று ஆனந்தத்துடன் தெரிவித்தார்.

"தன்யனானேன் ஸ்வாமி! தன்யனானேன். எல்லாம் தங்கள் ஆசீர்வாதம்தான். நமது மக்களின் மனத்தில் இடம்பெறும் மன் னனாக வளர்ந்தால் போதுமானது. தங்களைப்போன்ற குருதேவர் இருக்கையில் அவனுக்கென்ன குறைவு?" என்று பூரித்துப் போனான் கருணாகரன்.

மங்களபுரியில் எங்கும் மங்கள கோஷம். அந்த சமஸ்தான மக்களுக்கு மகிழ்ச்சி உதயமாகிவிட்டது.

ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்

# தண்டனை

என் அன்புள்ள நேசி கமலத்திற்கு,

என்னிடமிருந்து கடிதமே வரவில்லை என்று நீ எழுதியிருக்கிறாய். என் மனதிற்கு ஏதாவது நிம்மதியுண்டா, கடிதம் எழுதுவதற்கு? இப்பொழுதுதான் ஆறுமாதத்திற்கு முந்தி என் நாத்தனார் அகத்துக்காரர் செத்தார் என்று நான் உனக்கு எழுதியிருக்கவில்லையோ! அப்பொழுதே அவளையும், அவள் குழந்தையையும் இவ்விடத்திற்கு அழைத்து வந்துவிடுகிறேனென்று அவர் ஒரே முரட்டுப்பிடிவாதம் பிடித்தார். கடைசியில் என் பிடிவாதமே ஜயித்து, அவளுடைய மைத்துனன் வீட்டில் குழந்தையுடன் போய் இருந்துகொண்டிருந்தாள். மறுபடியும் எங்களை கிரகசாரம் விட்டபாடில்லை. போன ஞாயிறன்று அவள் திடீரென்று மாரடைப்பினால் செத்துவிட்டாளாம். உடனே வந்து குழந்தையை அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று அவளுடைய மைத்துனனிடமிருந்து தந்தி வந்தது. அவர் உடனே அந்த தரித்திரபிண்டத்தை அழைத்துவரப் புறப்பட்டுவிட்டார். தாயார் தகப்பனாரை விழுங்கிய அந்த தொடுகாலியை நம்ம வீட்டிற்குள் கண்டிப்பாய் அழைத்து வரப்படாதென்றும், முதல் காரியம், அவளை ஒரு அனாதை விடுதியில் கொண்டுபோய் சேர்ப்பித்துவிட்டுத்தான் வீட்டினுள் நுழையவேண்டுமென்றும் பிடிவாதமாகச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். இந்த குழப்பத்தின் நடுவில் உனக்குக் கடிதம் எழுத எனக்குத் தெம்பு ஏது?

இப்படிக்கு பிரிய நேசி

சென்னை, 1—4—41. லக்ஷ்மி."

அன்புள்ள கமலத்திற்கு,

வீட்டில் கண்டகண்ட அனாதைப்பிண்டங்களுடன் மன்றாடுவதிலேயே என்பாடு போதும்போதுமாய்ப் போய்விடுகிறது. நீயோ அடிக்கடி நான் கடிதம்போடுவதில்லை என்று கோபிக்கிறாய், எனக்கு கடிதம் எழுதப் பொழுதேது, சொல்.

உனக்கும்தான் வரவரத் திமிர் அதிகரித்துக்கொண்டுவருகிறது. ஒவ்வொரு கடிதத்திலும் எனக்கு நீ ஹிதோபதேசங்கள் எழுதவேண்டியதில்லை. எனக்கும் பகவான் போதியளவு புத்தி அளித்திருக்கிறார். ஆதலால் நீ எனக்கு சொல்லிக்கொடுக்கவேண்டியதொன்றும் அவசியமில்லை.

அந்த சனியனிருக்கே-அதான் என் நாத்தனார் பெண் அம்புஜம்-அது எங்கள் வீட்டில் காலைவைத்தன்றையிலிருந்து என் குழந்தை பத்மாவிற்கு ஏழரைநாட்டுச் சனியன் பிடித்துவிட்டதுபோலிருக்கு. எப்பொழுது பார்த்தாலும் அவர் அம்புஜத்தை எடுத்து, கொஞ்சிக் குலாவுவதிலேயே இருக்கார். அவள் என்னமோ நாலுபாட்டு பாடுகிறாளாம், அவள் மாமாவிற்கு பெருமை தலைகால் புரியவில்லை. பத்மாதான் என்ன செய்யும் பாவம்! அதுவும் குழந்தைதானே, விளையாட்டு புத்தி இப்போ பாட்டு கற்றுக்கொள்ள மாட்டேனென்று பிடிவாதம் செய்கிறாள். சிலநாள் கழிந்தால் பிடிவாதம் போய்விடும்.

என் கண்ணான குழந்தைக்கு நல்ல நாளும் கிழமையுமாக ஒரு நல்ல ஜரிகைப் பாவாடை தைத்துவிட்டால்போதும், அந்த பீடைக்கும் ஒன்று தைக்கவேண்டுமென்கிறார் அவர். என் குழந்தையின் கிழிசல் பாவாடையை போட்டுக் கொள்வதற்குக்கூட கதியில்லாத முண்டத்திற்கு ஜரிகைப் பாவாடைவேறு கேடாம், கேளேன்! எல்லாம் அவள் மாமா வீட்டிலிருக்கும் பொழுதுதான் அவள் செல்லம், கொஞ்சல் எல்லாம் பலிக்கிறது. இல்லையேல் அவளை செக்கைபோடு வெளுத்து, வேலைவாங்கி விடுகிறேன், கேளேன்! அத்தனாண்டு நண்டாட்டமா இருக்காளே, கொள்ளை வேலை செய்கிறாள் தெரியுமா! நானா ஒருவருக்கு தண்டச்சோறு புடைத்து வெறுமனே உட்காரவைப்பவள்? சுவாமி உள் மெழுகி, கோலம்போட்டு, பூதொடுத்து, பூஜை பாத்திரங்களையும், காப்பிபாத்திரங்களையும் புளிபோட்டு அலம்பிக்கவுத்து, காப்பி அடுப்புமூட்டி, எச்சிலிட்டு, சகலமான சில்லரை காரியங்களையும் செய்கிறது, அந்த நண்டு. இப்போ வாசற்கூட்டிக்கு அரை வாசிகாரியம் குறைந்துவிடவே அவள் சம்பளத்தில் இரண்டுரூபாயைக்கூட குறைத்துவிட்டேன். சனியன் கொஞ்சம் பெரிசாகட்டும்னு காத்துக்கொண்டிருக்கிறேன்! பிறகு... சமையல்காரியையும் துரத்திவிட்டால் போச்சு. அவள் மாமா அவளை பள்ளிக்கூடம் அனுப்பவேண்டுமென்றும், பாட்டு வாத்தியார் வைக்கவேண்டுமென்றும் தினம் சொல்லுகிறார். நான்தான் சாக்குபோக்கு சொல்லிக்கொண்டிருக்கிறேன். அனாதைப் பிணத்திற்கு இந்த பவிஷுகள் வேறையாம், பாரேன்!

மாடினிக்குப்போகணும், நாழிகையாய்விட்டது. அம்புஜத்திற்கு சில காரியங்களை செய்யச்சொல்லிவிட்டு, இதோ நானும் பத்மாவும் பக்கத்தாத்து மாமியுடன் புறப்படணும். மற்றவிஷயம் அடுத்த கடிதத்தில்.

சென்னை, 7—9—41.

இப்படிக்கு, அன்புள்ள

லக்ஷ்மி.

பிரியமுள்ள கமலத்திற்கு,

இத்தனைநாளாக உன்னிடமிருந்து கடிதமே காணமே என்று ரொம்ப வருந்துகிறேன். அகத்தில் அனைவரும் க்ஷேமம்தானே?

உனக்கு இந்த கடிதத்தைப்படித்து எதிர்பாராத சந்தோஷமும், ஒரு புறம் சிரிப்பும் உண்டாகலாம். நீ அத்தனை புத்திவாதங்கள் ஜாடை மாடையாக எழுதியும்கூட எனக்கு எரிச்சலை மூட்டிற்றேதவிர என் உள்ளத்தில் பாய்ந்து நன்மையை அளிக்கவில்லை. ஆனால் ஒரு அதிசயத்தைக்கேளேன். மூன்று மாதத்திற்கு முந்தி ஒருநாள் இவருடைய பத்திரிகாலயத்திற்கு "ஸ்நேகமயீ" என்ற பெயரில் ஒருபெண் அழகான சிறுகதையொன்றை எழுதி 'வாணி'யில் பிரசுரிப்பதற்காக அனுப்பியிருந்தாள். அவளுடைய உண்மைப்பெயரையும், ஊரையும் குறிக்கக்காணோம். அது கிடக்கட்டும் பத்திரிகைக்கு பிரசுரத்திற்காக வரும் கதைகளனைத்தையும் முதன்முதல் நான்தான் படித்து நல்லதைப்பொறுக்கி எடுத்து அவருக்கு opinion கொடுப்பது என்பது உனக்குத்தெரியுமே "ஸ்நேகமயி" யின் "அனாதைக் குழந்தை" என்ற அந்த கதையைப்படித்துவிட்டு என் உள்ளத்தில் ஒரு புரட்சி எழும்பிவிட்டதை நான் எப்படி விவரிப்பேன்? கமலம்! தாரா என்ற அனாதைக்குழந்தையின் வாழ்க்கைச் சித்திரத்தை அவ்வாசிரியை மிகவும் அழகாகவும், தத்ரூபமாகவும் உருக்கமாகவும் வர்ணித்து என் உள்ளத்தை உருக்கிவிட்டாள் புண்ணியவதி. குழந்தை தாராவின் பெற்றோர்கள் திடீரென்று காலரா கண்டு மரித்துவிடவே, தாரா மாமாவின் இல்லத்தில் வந்து சரண் புகுகிறாள். மாமா அவள் பொருட்டு அதெவ்வளவு

நல்லவராகவிருந்து என்ன பயன்? அவளுக்கும் நம்ம அம்புஜத்தைப் போல் கொடிய மாமியொருத்தி இருக்கிருள். மாமா வீட்டில் இல்லாதபொழுதில் தாராவை அவள் மாமி படாத பாடுபடுத்தி வறுத்து வாயில் போட்டுக் கொள்ளும் காட்சியனைவதையும் படிக்கப் படிக்க எந்தக் கல் நெஞ்சம்தான் பாகாக உருகாது? அய்யோ! அந்தத் கட்டத்தை படிக்கப் படிக்க என்னறிவில்லாமல் அம்புஜத்தின் பொருட்டு நான் செய்த அடாத செய்கைகளை நினைந்து நினைந்து அனுதாபம் கொண்டு என் உள்ளம் மெழுகுபோல் கரைந்து என் செல்வம் அம்புஜத்தின்மீது அன்பு பாணத்தைத் தொடுக்கலாயிற்று. கமலம் அன்றையிலிருந்து எனக்கு இரட்டைக் குழந்தைகள், தெரியுமோ உனக்கு! அம்புஜமும், பத்மாவும் என் இரு கண்மணிகளென்றே பாவிக்கிறேன். என்னைவிட அவருக்குத்தான், நான் அக்ஞானத்தை அறவே விட்டொழித்து ஞானேதயமடைந்தேனே என்று அளவறியா ஆனந்தம்! இப்பொழுது கண்மணி அம்புஜத்தையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டேன். குழந்தை கொள்ளை சமத்து. எத்தனை நன்ருகப் பாடுகிருள் தெரியுமா? எல்லாம் அவளுடைய தாயாரின் சிக்ஷை. வர மாதம் பத்தாம் தேதி சென்னை ரேடியோவில் குமாரி அம்புஜத்தின் பக்க வாத்தியத்துடன்கூடிய சங்கீதம் என்று வானெலியில் பிரசுரித்திருக்கே, அது எங்க அம்புஜாக் கண்ணுதான். பகவான் என் அடாத செயல்களை மன்னித்தருள்வாராக இதோ, குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் நேரமாய்விட்டதே! நான் ஏதாவது பக்ஷணம் தயாரித்து வைக்கணும்.

சென்னை 10—1—42. இப்படிக்கு ஆருயிர் தோழி,
லக்ஷ்மி.

அன்பார்ந்த கமலா!

நீ ஒரு பக்காப் பேர்வழி என்று எனக்கு நேற்றுதான் தெரியும். அந்த "அநாதைக்குழந்தை"யை நீதான் மாற்றுப்பெயரில் எழுதினையென்ற ரகசியத்தை நேற்றுதான் என் கணவர் என்னிடம் வெளியிட்டார். உடனே எனக்குண்டான ஆனந்தத்திற்கு அளவுமுண்டோ? இதனைவதும் என்னை வழிக்குக் கொண்டுவருவதற்காக நீ செய்த சூழ்ச்சியென்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால் உன்னை லேசில் விட்டிருப்பேனு? இருக்கட்டும்! இருக்கட்டும்! உன் கதைக்கு சன்மானமாக 20 ரூ. காரியாலயத்தார் அனுப்பப்போவதாகத் தெரியவந்தது. அதனுடன்கூட என் செல்வம் அம்புஜத்தை என் உள்ளத்தினுள் பிணைத்துவிட்டதற்காக உனக்கு அனுப்பச் சொல்லி, ஒரு பெனரீஸ் ஸில்க் புடவையும், ரவிக்கைத் துண்டும் கொடுத்துள்ளேன். இதான் உன் செயலிற்குத் தகுந்த தண்டனை. இத்தனைமட்டும் போதாது. இன்னும் வேண்டும். நீ முன்னெருதடவை கேட்டிருந்தபடி குழந்தைகளிருவருடைய புகைப் படமொன்றையுங்கூடப் புடவையுடன் அனுப்பியுள்ளேன். இந்த தடவை கோடை விடுமுறைக்கு கட்டாயம் உன் பர்த்தாவுடன் எங்களகத்தில் வந்து ஒரு மாதமாவது இருந்துவிட்டுப் போகவேண்டும். இப்படிக்கு உன்னுடைய ஸ்நேகமயீ!

சென்னை 1—2—42. லக்ஷ்மி.

---

## மோகினியின் சந்தா விவரங்கள்

**வருடசந்தா. ரூ. 3-0-0 தனிப்பிரதி அணு 4. ஜீவிய சந்தா. ரூ. 50.**

**ஜீவியசந்தா செலுத்துவோருக்கு, அவர்கள் பணம்கட்டும் தேதிக்குப் பின் வெளியாகும் மோகினி இதழ்களும், வை. மு. கோ. நாவல்களும் அனுப்பப்படும். ஆண்டுமலர்கூட அன்பளிப்பாக அனுப்பப்படுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேம்.**

**மானேஜர்.**

**குகப்ரியை** பண்டைகாலப் பெண்டிர் 1.

# பாமதி

‘‘புதுமைப் பெண் எப்படி இருப்பாள்?’’ என்று கேட்டார் ஒருவர். அப்பொழுது பாரதியார் கண்முன்னே புதுமைப் பெண் தோன்றினள்; அவள் அரிய விஷயங்களையும் தன் அபிப்ராயத்தையும் சொன்னாள்.

பிறகு அவர் ‘‘புதுமைப் பெண்; இவள் சொற்களும் செய்கையும், பொய்கொண்ட கலிக்குப் புதிதன்றி, சதுர்மறைப்படி மாந்தரிருந்த நாள் தன்னிலே பொதுவான வழக்கமாம்.’’ என்று பளிச்சென்று சொல்லி விட்டார். ‘‘இதென்ன இது? வேதகாலத்திலே இப்பொழுது பாரதியார் சொல்லுகின்ற புதுமைப் பெண்ணைப்போலவா இருந்தார்கள்!’’ என்று நமக்குத் தோன்றுகிறது. ‘மகாகவிகளின் அருள்வாக்கிலே பொய் வருமா?’ என்றுகூடச் சந்தேகிக்கத் தொடங்கிவிடுகிறோம். ‘திரும்பிப் பார்!’ என்று பெரியோர்கள் சொல்லுவதுபோல, சரித்திரகாலம், புராணகாலம், வேத காலம் என்று பின்னோக்கிச் சென்றுபார்த்துத் தெளிந்துகொள்ளவேணும் என்ற ஆவலும் கூட எழுகின்றது. மனோரதத்தில் ஏறி நம்பி பிரயாணத்தைத் தொடங்கிவிடுகிறோம்.

ஆம்! ஆதிகாலத்தில் பெண்மணிகள் மிகமிக உயர்ந்த நிலையில் தான் இருந்திருக்கிறார்கள். கல்வி கேள்விகளில் சிறந்த பெண்மணிகள் பலர், கலைகளிலும், விஞ்ஞானத்திலும், வேதவேதாந்தங்களிலும் கரை கண்டவர்கள் பலர். அவர்கள் எல்லோரும் நம் கண்முன்னே தோன்றுகிறார்கள், அவர்களைப் பார்க்கும்பொழுது, ‘இடைக்காலத்தில் நாம் எப்படி இவ்வளவு தாழ்ந்துபோனோம்? எழுத்தறிவுகூட இல்லாமல் வெறும் அடிமைகள்போல், மிருகங்கள்போல் எப்படி ஆனோம்?’ என்றே தோன்றுகிறது. நாம் ஏன் தாழ்ந்துபோனோம்? என்பது மிகவும் பெரியதும் சிக்கலானதுமான ஒரு பிரச்னை.

காலப்போக்கிலே இடைக்காலத்தில் ஜைனர்களது கொள்கைகள் பரவப் பரவ, பெண்கள் தாழ்த்தப்பட்டார்களென்பதும், பெண்களின் உரிமைகளையும் பெருமைகளையும் உலகத்தாருக்கு உணர்த்தவே, ஞான சம்பந்தப்பெருமான் அவரித்தாரென்பதும் நமக்குத்தெரியும். அதன்பின் மொகலாயர் வருகை ஒரு காரணமாயிற்று. பிறகு நம் குழந்தைகளே நம்மைத் தாழ்த்தத் தொடங்கினார்கள். ‘‘அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு என்னத்திற்கு’’ என்று மேடைகளில் ஏறிக் கோஷித்தார்கள். இதன் பயனாகவே பாரதியாரின் புதுமைப்பெண் தோன்றி, ‘‘அடா, மூடர்களே! நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமால் என்றும், பெண் சிறந்த கல்வி அறிவும் வீரமும் உள்ளவளாயிருந்தால்தான் வீரப்பிள்ளைகள் தோன்றுவார்கள், நாடுநலம் பெறும் என்றும் சொன்னாள், இது சரிதான்! சதுர்மறைப்படி மாந்தரிருந்த நாளிலே பெண்கள் எப்படி இருந்தார்கள்? அவர்கள் எவ்வளவு சிறந்த நிலையிலிருந்தார்கள் என்பதற்குப் பலரைச் சொல்லலாம், அவர்களுள் தலைசிறந்தவள் பாமதி.

* * * *

அழகிய தோப்பு. அதனடுவே, சின்னஞ்சிறுவீடு. ஓலையினால் வேய்ந்தது. நீண்டதிண்ணை. திண்ணையில் சுவற்றோரத்தில் வெளுத்ததாடியுடன் கூடிய

ஒரு பெரியவர். சாந்தமும் கருணையும் ததும்பும் கண்கள், நீண்ட கூரிய மூக்கு, அகன்றநெற்றி இவைகள் அவர் சிறந்த அறிவாளி என்பதைக் குறித்தன. எதிர்வரிசையில் பல மாணவர்கள் ஒழுங்காய் உட்கார்ந்து சந்தை வைத்து வேதம் ஓதுகிறார்கள். அவர் மேல் உத்தரீயத்தைக் கீழே போட்டுவிட்டு அப்பொழுதே சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "எங்கே மிச்ரன்? இன்னும் வரவில்லையா?" என்றார்.

மாணவர்களுள் ஒருவன் சந்தையை நிறுத்தி "பாமதி ஆற்றிற்குப் போகும் வழியிலே வரப்பில் வழுக்கி, விழுந்து விட்டாள். அவன் தீர்த்தம் கொண்டுவர ஆற்றங்கரைக்குப் போயிருக்கிறான்" என்றான்.

"அவள் இன்னும் வரவில்லையே?" என்றார் அவர். அவர் முகத்திலே கவலை; குரலிலே ஒரு கனிவு.

"நொண்டி நொண்டி மெதுவாய் வந்துகொண்டிருக்கிறாள். பாடத்திற்கு நேரமாகிவிட்டதே என்று நாங்கள்வேகமாய் வந்துவிட்டோம்"

அவர் "மேலே பாடம் நடக்கட்டும்" என, வேதகோஷம் மீண்டும் தொடங்கிற்று. பாடம் வழக்கம்போல நடந்துகொண்டிருந்தது. ஆனால் அன்று ஏனோ அவர் மனம் பாடத்திற்செல்ல மறுத்தது. ஏதோ ஒப்புக்கு உட்கார்ந்திருந்தார். அவர் மனம் சில வருஷங்களுக்குமுன் நடந்த ஒரு சம்பவத்தின் மீதே சுழன்றுகொண்டிருந்தது. அப்பொழுது பாமதிக்கு வயது 8. தாய் படுத்தபடுக்கையில் கிடந்தாள், அவர் தன்னாலியன்றவரையில் அவளுக்குச் சிகித்சைசெய்து பார்த்தார். ஏதாவது பலித்தால்தானே. பரமவேதாந்தியான அவர் நெஞ்சமும் சலித்தது. மெதுவாய் அவள் முன்னெற்றியின்மேல் புரளும் கூந்தலை ஒதுக்கிவிட்டார். அவளுக்கும் தன் நிலைமை தெரிந்துதானிருந்தது. சுபாவத்திலேயே உள்ள சங்கோசத்தினால் அவள் ஒன்றும் பேசவேயில்லை. மனத்துள் என்னென்ன சொல்லவேணுமென்று நினைத்தாளோ? அவர் ஒரு நெடுமூச்செறிந்தார், கூர்ந்து அவள் முகத்தையே பார்த்தார். அதைப்புரிந்துகொண்டவள்போல, "என்னைப்பற்றி எனக்கொன்றும் விசனமில்லை. உங்களுக்கும் வயதாகிவிட்டது. சிச்ருஷைக்கோ சிஷ்யப்பிள்ளைகள் இருக்கிறார்கள். இந்தக் "கிளிக்குஞ்சை" மட்டும் யாராவது ஒருதகுந்த வித்யார்த்தியிடம் ஒப்புவித்துவிட்டால் கவலையில்லை." என்றாள். மிச்ரனை நினைத்துத்தான் அந்த வார்த்தை சொல்லியிருப்பாளோ என்று எண்ணமிடலானார். அவர் கூடிய சீக்கிரத்தில் பாமதியை அவன்கையில் ஒப்புவித்துவிடவேணுமென்று நினைத்தார். அதற்கேற்றாற்போல அவன் அவளிடமிருந்து குடத்தை வாங்கிக்கொண்டுபோனான் என்றவுடன், தான் அதுவரையில் எண்ணமல் விட்டிருந்த விஷயம் மீண்டும் மீண்டும் அவர் மனத்துள் தோன்றலாயிற்று.

மிச்ரன் குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டான் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இன்பகரமான நினைவுகளால் அவன் மனம் நிறைந்திருந்தது. மற்ற மாணவர்களுக்கெல்லாம் கிட்டாத பெரும்பேறு தனக்குக் கிடைத்ததை எண்ணி, எண்ணிப் பூரித்தான். ஆனால் அவரோ படுத்துவிட்டார். குருதக்ஷிணை கொடாமல் கன்னிகையைத் தானமாக ஏற்றுக்கொள்வது முறையல்ல என்றது அவன் மனம், மிகுந்த வணக்கத்தோடு குருவின் காலடியிலே நின்றான். புன்சிரிப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தார் அவர். அவர்கால்களை வருடியவண்ணம் காலடியிலே உட்கார்ந்திருந்தாள் பாமதி.... மெதுவாய் விஷயத்தை எடுத்தான்.

"குருதக்ஷிணையா? உன்னால் என்ன கொடுக்கமுடியும்? உன் நிலைமையோ எனக்குத்தெரியும். காதுமட்டும் வெளுத்த எழுநூறு குதிரைகள் வேணுமென்பதா?"

"இல்லை, இல்லை, நீங்கள் எதையாவது பெற்றுக்கொள்ளத்தான் வேணும். என்றால் இயன்றதைக் கேளுங்கள் செய்கிறேன்" என்றான்.

"சரி. ஒரு காரியம்செய், நெடுநாட்களாக பிரம்மசூத்திரத்திற்கு ஒரு சிறந்த உரை எழுதவேணுமென்று நினைத்திருந்தேன், முடியவில்லை. அதைச் செய்துமுடித்தால் அதுவே குருதக்ஷிணை."

"அப்படியே செய்கிறேன்." என்றான் அவன்.

ஆச்சர்யத்தினால் கண்களை அகல விழித்து நிமிர்ந்து பார்த்தாள் பாமதி. மிகவும் மெதுவான குரலில் மறுபடி சொன்னார். "அதற்குஉனக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் பாமதி செய்வாள். நான் எந்தெந்த இடங்களுக்கு எப்படி விரிவுரை எழுத நினைத்தேனென்பதெல்லாம் அவளுக்குத் தெரியும்.

அவன் திகைத்துப்போனான். அதுவரையில், வீட்டுவேலை நேரம் போக மிகுந்த நேரத்தில், ஏதோ பொழுதுபோக்காக பாமதி படிக்கிறாள் என்றே அவன் நினைத்திருந்தான். அவரது வார்த்தைகள் அவனை ஆச்சர்யத்துள் ஆழ்த்தின. அவன் கைகள் தாமாகவே தலைமேல்குவிந்தன. குருநாதரின் இருபாதங்களையும் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். விவாகம் முடிந்தது. குருநாதரும் மறைந்துபோனார். மிச்ரனும் பாமதியும் இல்வாழ்க்கையைத் தொடங்க நாளும் குறித்தாயிற்று. அப்பொழுது அவளுக்கு வயது பதினேழு; இளமையின் முழு சௌந்தர்யமும் அவளிடம் குடிபுகுந்தது. இடுப்பிலே குடத்தை எடுத்துக்கொண்டு அவள் நடந்துவரும் அந்த அழகிய காட்சியைக் காணும்பொழுதெல்லாம், இத்தகைய கட்டழகியை, அறிவின் களஞ்சியத்தைத் தனக்களித்த குருநாதரையும் கடவுளையும் தொழுதான். புதுக்குடித்தனம். முதலில் குருதக்ஷிணையைக் கொடுத்த பிறகல்லவா மற்றவை. காலைக்கடன்கள் பூஜை, புனஸ்காரம், அதிதி சத்காரம், வேதபாடம் இவைகள் முடிய சூரியன் உச்சிக்கு வந்துவிடுவான்.

கூடத்திலே, வெண்தாமரையிலமர்ந்திருக்கும் வாக்தேவியினெதிரே. இரண்டு அழகிய தர்ப்பாசனங்கள், மூதநூலின் சுவடிகளைக் கையில் வைத்தவளாய் படித்துப்படித்து விரிவுரை சொல்லிக்கொண்டே போவாள் அவள். அந்த அற்புதமான உரையோடு தன் அபிப்ராயங்களையும் கலந்து எழுதிக்கொண்டே போவன் அவன். இடையிடையே சந்தேகங்கள், ஆக்ஷேபசமாதானங்கள், தர்க்கங்கள் எல்லாம் சாமக்கணக்கில் நடைபெறும். சூரியன் மலைவாயில் விழுமுன் எழுந்து, மீண்டும் வேலைகள், சந்தி, ஜபம் இவைகள்; மறுபடி இரவு போஜனம் முடிந்ததும், அதே கூடத்தில் ஐந்து முகங்களுடன்கூடிய குத்து விளக்கு இரவைப் பகலாக்குவதுபோல் ஜ்வலிக்கும். அதனடியில் மறுபடி எழுதத்தொடங்குவார்கள்,

* * * *

ஆயிற்று நாட்கள் மாதங்களாயின; மாதங்கள் வருஷங்களாயின. அன்று பிற்பகல் உரைமுடிந்துவிட்டது. இதுவரையில் கண்டிராத ஒரு புதுமையான வியாக்யானத்தை உலகம் முழுவதும் பார்த்துப்போற்றப் போகிறது என்பதை எண்ண எண்ண அவன்மனம் எல்லையற்ற சந்தோஷத்தினால் துடிதுடித்தது. முடிந்துவிட்டது. மங்கள ச்லோகத்தை முடித்து சுவடியைக்கண்களில் ஒற்றிக்கொண்டான். 'அப்பாடா!' வென்ற ஒரு பெருமூச்சுடன் சுவடியைக்கிழேவைத்துவிட்டு அவளை ஏறிட்டுப்பார்த்தான் அவன். துணுக்கென்றது அவன் நெஞ்சு.

அவள் தலை நரைத்துப் பஞ்சுபோலிருந்தது. முதுமையின் சின்னங்களோடு அறிவின் ஒளியினால் ஜ்வலித்தன அவள்கண்கள். தன்னைத்தானே ஒருமுறை பார்த்துக்கொண்டான். தானும் வயோதிகத்தன்மையை

# "சாணி தொகச்ச காலுக்கு"

சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு. சித்திரைமாதம்; என் கணவரின் பிறந்தநாள்.... அன்றேதான் என் தாயாரின் திவசம்; அன்று தற்செயலாக வெள்ளிக்கிழமையும் சேர்ந்தது. என் தாயார் சுமங்கலியாக இறந்ததால் அன்று அநேக சுமங்கலிகளுக்கு புடவை, ரவிக்கை, தக்ஷிணை முதலியவை களுடன் வெத்திலேப்பாக்கு கொடுப்பது வழக்கம்.

காலேயில் காப்பி சாப்பிடும் வழக்கம் அப்போது கிடையாது. என் கணவர் காலே 10 மணிக்கெல்லாம் ஆபீஸுக்குப் போகவேண்டுமாதலால் சின்ன சமையல் ஒன்று தயார் செய்துவிட்டு சுமங்கலிகளுக்கு வெத்திலேப்பாக்குக் கொடுத்துவிட்டு, 'இன்னும் அவர் வரவில்லேயே!' என்று காத்திருந்தேன்... காலே மணி 9 இருக்கும். வீதியில் ஒரு ரிக்ஷா வந்துநின்றது. எனது ஒன்றுவிட்ட சிறிய தகப்பனரின் மகன் கையில் சைகிலேத் தள்ளிக்கொண்டு கூடவே வந்தான். அவன் முகத்தில் அசடு வழிந்தது.

வண்டியிலிருந்த என் கணவரின் முகத்தில் துக்கம் தேங்கிக்கிடந்தது, இறங்குவதற்கு முடியாது, முன்கூறிய என் ஒன்றுவிட்ட அண்ணன் அவரைத் தாங்கிவந்து உள்ளே விட்டான். என் கணவரின் காலில் பலமான வீக்கமும், கட்டும் காணப்பட்டதைக் கண்டதும் என்னுள்ளம் விஷயமறியாது பதறியது. "என்ன என்ன !" என்று துடித்தவாறு கேட்டேன்.

அவன் அசடுவழியும் முகத்துடன், "ஒன்றுமில்லே... சைக்கில்விடக் கற்றுக்கொடுக்கச் சொன்னர். கற்றுக்கொடுத்தேன். ஹி, ஹி ஹி...தவறி விழுந்துவிட்டார். முதலில் அப்படித்தான் அடிபடும், பயப்படாதே. நாங்கள் கூட இப்படி பட்டுத் தேறியவர்கள்தான்." என்று பல்லே இளித்தான்.

---

அடைந்துவிட்டோம் என்ற விஷயம் அப்பொழுதே அவனது நினைவுக்கு வந்தது. "என்வரையில் எப்படியாவது போகட்டும். பிரம்மசாரியாயிருந்தது சிலாக்யம்தான்; ஆனல் என்னேயே நம்பியிருந்த இந்த பாமதிவாழ்க்கை இன்பங்களேப்பற்றி என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்தாளோ! அடாடா! நாம் குருதக்ஷிணையைக் கொடுக்க, இளமையையும், வாழ்க்கையின்இன்பத்தையுமல்லவா திபாகம்செய்யும்படி நேர்ந்துவிட்டது! அவளுக்கு அபராதிபாகிவிட்டேனே!" என்று நினேக்கையில் அவன் கண்ணீர் துளித்து நின்றது.

"பாமதி!" இந்த வார்த்தைகள் அன்பும் பரிவும் சோகமும் கலந்த குரலில் அவன் வாயினின்றும் எழுந்தன. பளிச்சென்று ஒரு மின்னல் அவ்வளவுதான்! அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

'ஏன் ! தியாகம் செய்வது என்பது உங்களுக்குமட்டுமேதான் ஏற்பட்டதோ?' என்ருள். அவள் முகத்திலே புன்னகை. அப்படியே திகைத்துப்போனன் மிச்ரன்.

"என் கண்மணி! இப்படிப்பட்ட உரை எழுதியதற்காகமட்டுமல்ல, நீ செய்திருக்கிற இந்த மிகப்பெரிய தியாகத்தின் பொருட்டு, உன் பெயரையே இடுகிறேன் இந்த நூலுக்கு" என்ருன்.

பாமதி என்ற அந்த உரைநூல் இன்றும் பெரியோர்களால் புகழப்படுகிறது. பாமதியும் மிசிரரும் மறைந்துபோனர்கள். ஆனல், நம்முடைய எண்ணங்களிலும் ஏடுகளிலும் என்றென்றும் இளமையோடு உலவுகிருர்களென்பதில் சந்தேகமென்ன ?

அவன் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பத்தி எரிந்தது. "ஏற்கெனவே இதற்குமுன்பு இரண்டு மூன்றுதரம் இப்படியானதால் இனி இந்த வித்தைவேண்டாம். நீ சற்றுக்கொடுக்காதே என்று முட்டிக்கொண்டேனே? கேட்டாயா! இந்தமுறை பலமாக அடிபட்டுவிட்டதே!"... என்று அவனைத் திட்டிவிட்டேன். 'அவருடைய பிறந்தநாளன்று இதென்ன சம்பவம்!' என்று எனக்கு மிகுந்த கவலையாகிவிட்டது.

உடனே டாக்டர் வந்தார்; ஏதோ கட்டுகட்டினார். அடிபட்ட அதிர்ச்சியில் ஜுரம்கூடச் சிறிது உண்டாகியது; சுமார் ஒருமாதகாலம் கட்டு அவிழ்க்கவில்லை. சரியாக முழங்கால் முட்டியில் பட்டதால் நரம்பு பிசகிவிட்டது என்றார் டாக்டர். கட்டவிழ்த்தபிறகுகூட கால் பழயமாதிரி நடக்கவராது சற்று ஊனமாகவே சாய்த்து நடக்கவாரம்பித்தார். எங்களுக்கிருந்த வருத்தம் கூறமுடியாது. 'இதுவும் ஒரு பாபமா!' என்று ஏங்கி அதே கவலையால் மெலிந்துவிட்டார்.

இந்த சமயத்தில் என் சகோதரியின் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சமாகியது. என் இளைய சகோதரி, கல்யாணத்தில் பரிகாஸப்பாட்டு பாடுவதற்காக என்னிடம் எழுதி ஓயாது பாடம்செய்வாள். ஸம்மந்திப் பாட்டுக்கு 20 வருஷத்திற்குமுன்பு இருந்த மகிமை இன்று ஏது?

**எங்கள் பெண்ணாலே வந்ததல்லவோ இந்தபோகம்!**
**சம்மந்தி உனக்கு ...........**
**சாணிதொகச்சகாலுக்கு தங்கக் காப்புகொலுசுமாச்சு**
**வாணிச்சிப் பிண்ணாக்கும்போச்சு வடையாச்சு**
**ராங்கிமிக மிஞ்சிப்போச்சு நாணயக் கை வீசலாச்சு**
**பொங்கும் விரலுக்கு ரத்தினபுதிய மோதிரமாச்சு—பெ**

என்கிற அடிகளை நான் சொல்லவும், என் சகோதரியும் இன்னொரு சகோதரியின் மகளும்கூட திருப்பித்திருப்பிச் சொல்வதையும் கேட்டு என் கணவருக்குக் கோபம் கோபமாக வரும். திட்டுவார். 'இனி இதைப் பாடினால் தெரியும் சேதி' என்று அதட்டினார். அப்போது என் சகோதரியின்பெண் சிரித்துக்கொண்டே 'சித்தப்பா! இதோபாடுகிறேன். என்னசெய்வீர்கள்!' என்று வீராப்பு பேசிப் பாடினாள்.

சற்றுதூரத்தில் படுத்திருந்த என் கணவர் அந்த ஆத்திரத்தில் அதிக கோபத்துடன் கையை ஓங்கிக்கொண்டு வேகமாக ஓரடி எடுத்துவைத்தார். காலில் ஏதோ ஒன்று மளுக்கென்று சுளுக்கிய சத்தம்கேட்டு நடுங்கினோம். 'என்ன ஆச்சரியம்! இத்தனைநாளாக ஊனமாக நடந்துவந்த அவர், பழய மாதிரி சர்வசாதாரணமாக நடக்கவாரம்பித்ததும் எனக்கும் மற்றவர்களுக்கும் சிரிப்பும் சந்தோஷமும் அடங்கவில்லை. அவருக்கும் ஆச்சரியம் கூறத்திறமில்லை. 'பார்த்தீர்களா! சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்பதுபோல் ஒரு பரிகாஸப்பாட்டும் பரமஅவுஷதமாகி உங்களுக்குக் காலைக்கொடுத்துவிட்டது. இனிமேல் கோபிக்கமாட்டீர்களே!' என்றோம். "நன்றாக அதே பாட்டைப் பாடுங்கள்" என்று ஒரு திட்டமிட்டுப்பின் தானும் சேர்ந்து பாடினார். தனக்குக் கால் சரியான சந்தோஷத்தில் அந்த பாட்டுக்குச் சரியாக ஆடக்கூட ஆடியிருப்பார். ஆனால் அவருக்கு நாட்டியம்தெரியாது பாவம்! அதுமுதல் இந்த "சாணி தொகச்ச காலுக்கு" என்ற அடிகளை அவரே ஓயாது முணுமுணுத்துவருவார் இந்தப்பாட்டுக்கு ஒரு தனிமகிமை தான் என்பதோடு, பிறகு ஒவ்வொரு கல்யாணத்திலும் இதைப் பாடச் சொல்லுவார். எப்படியிருக்கிறது?

---

**இடம் மாறுவோர் 25 உக்குள் புதிய விலாசத்தைத் தெரிவிக்காவிடில், பழைய விலாசத்திற்கே பத்திரிகை அனுப்பப்படும். அதுதவறிவிடின் நாம் ஜவாப்தாரியல்ல. ¼ அணா ஸ்டாம்பு அனுப்பினால் தான் திரும்பவும் பிரதி அனுப்பமுடியுமென்பதைக் கவனிக்கவும்.**
**மானேஜர்.**

# ஆகாச கங்கை

ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களில் ஒருவராகிய ஆளவந்தார் தமது சிஷ்யர்களைப் பார்த்து "உங்களில் யாராவது திருமலையிலுள்ள பாபவினாசனியிலிருந்து தினம் ஒருகுடம் தீர்த்தம் கொண்டுவந்து திருமலை அப்பனின் திருமஞ்சனத்திற்கு ஸமர்ப்பிக்க முடியுமா ?" என்று கேட்டார்.

அதற்கு, திருமலை நம்பி என்பவர் "அடியேன் விடைபெற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லித் திருமலைக்குப்போய் பிரதி தினமும் பாபவினாசனியிலிருந்து ஒருகுடம் தீர்த்தம் கொண்டுவந்து ஸமர்ப்பித்துக் கொண்டிருந்தார். இவரது கைங்கர்யத்தில் திருப்திகொண்ட ஸ்ரீநிவாஸர் அன்பின் மிகுதியால் ஓர் வேடச் சிறுவன்போல் வேஷமணிந்து நம்பி தீர்த்தம் எடுத்து வரும்வழியில் சென்று "தாதா! எனக்கு வெகு தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம்கொடும்" என்றார்.

இதைக் கேட்ட நம்பி "அப்பா! உன்னைப்பார்க்க ஆசையாயிருக்கிறது. உன்னைப் பார்த்துக்கொண்டும் உன்னுடன் பேசிக்கொண்டும் இருந்தால் என் ஆவல் தணியும்; ஆனால் உன் தாகத்தைத் தணிப்பதற்கு இச்சமயம் முடியாமலிருக்கிறது. கோயிலிலிருக்கும் ஸ்வாமிக்கு திருமஞ்சன தீர்த்தம் இது. இதை உனக்குக் கொடுத்துவிட்டு மறுபடியும் கொண்டு வருவதற்கு நாழிகையாய்விடும் அப்பா! என்ன செய்வேன்?" என்றார்.

இதைக் கேட்ட சிறுவன் "தாதா! எனக்குக் கொடுப்பது அந்த ஸ்வாமிக்கு உகப்பாயிருக்கும்" என்றான். தாதா, "எனக்கு ஆசார்யன் உத்திரவில்லை" என்று சொல்லி நடந்துகொண்டிருந்தார். சிறுவன் பின்புறம் சென்று தன் கையிலிருந்த அம்பினால் குடத்தைப் பொத்தல்செய்து தீர்த்தத்தைக் குடித்துவிட்டான். குடம் இலேசாயிருப்பதைக் கண்ட நம்பி அவனைப்பார்த்து "நீதான் இக் குடத்தைப் பொத்தல்செய்து தீர்த்தத்தைக் குடித்துவிட்டாய். நீ மிகவும் துஷ்டப்பயல், உன்னை என்ன செய்தால் தீரும்? மறுபடியும் அத்தனை தூரம் சென்று தீர்த்தம் எடுத்து வருவதற்கு மிகவும் நாழிகையாய்விடும்; இதற்கென்ன செய்வது?" என்று தவித்தார்.

சிறுவன் சிரித்து "தாதா! நீர் இந்த தள்ளாத வயதில் நெடுந்தூரம் சென்று தீர்த்தம் கொண்டுவருவதைக்காண என்மனம் ஸஹிக்கவில்லை. என் அன்பின் அடையாளமாய் இம்மலையிலிருக்கும் பாறையைப் பிளந்து அதிலிருந்து தீர்த்தம் உண்டாக்குகிறேன். அதுதான் ஸ்வாமிக்கு உகப்பாயிருக்கும்; அதையே எடுத்துச்செல்லும்" என்று சொல்லிக்கொண்டே மலைப் பாறையைப் பிளந்து ஜலத்தை உண்டாக்கித் தன் மங்களரூபத்தை அவருக்குக் காட்டிவிட்டு அந்தர்த்யானமாய்விட்டான்.

மலைமேலிருந்து ஆகாச கங்கையைப்போல் ஜலப்பிரவாகம் கொட்டுவதைக் கண்ட நம்பி, ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து பக்திப் பரவசத்தால் மெய் சிலிர்த்து, அதிலிருந்து தீர்த்தம் எடுத்துப்போய் ஸ்ரீநிவாசரை ஸேவித்து "ஸ்வாமி! தேவரீர் பொன்னடி நோக நெடுந்தூரம் நடந்துவந்து அடியேன் துயர் தீர்க்கச் சேவகம் புரிந்து, மலையைப் பிளந்து இம்மாதிரி விழும்படிச் செய்த உம் கருணையை எவ்விதம் துதிப்பேன் ஏழையேன்! ஹே கிருபாஜலநிதே!" என்று மனமுருகி ஆனந்தக் கண்ணீர் பெருக தேகம் புலகிதமுறத் துதித்தார்.

ஸ்ரீனிவாஸர் "தாதா" என்று அழைத்ததினால் திருமலை நம்பி வம்சத்தார்க்கு தாததேசிகன், தாதாச்சார் என்று பேர் வழங்குகிறது.

# தற்காலத் தமிழ் கவிதை

## விமர்சனம்

வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ.

## 4. சுத்தானந்த பாரதியாரின் "கவிக்கனவுகள்"

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் பாடல்களில் கவிதைச்சுவை நிறைந்தது அவருடைய 'கவிக்கனவுகள்' என்ற அரிய நூல். இதில் ஆங்கிலம் பிரெஞ்சு இதாலியக்கவிதைப் பந்தாவை வழங்கியிருப்பது, அனுபவிக்கத் தக்கது. ஆங்கிலம் பிரஞ்சிலும்,கவிதை இயற்றும் திறமையுடையவர்தான், நமது கவிஞர் சுத்தானந்தர். ஆனால் தமிழில்தான், அவருடைய கவிதைச் சுவை உண்மையாகவே தித்திக்கிறது. நடையில் மொழி மின்சாரம் சுழன்று திரிகிறது, ஆங்கில ஆராய்ச்சி மேதைகளான *பிராட்லி, *ஜான் லிவிங்ஸ்டன் லோயிஸ், போன்றவர்கள் கூறும் ஆராய்ச்சி முறையைக் கவனித்தால், தமிழ்க்கவிதையின் உள்ளத்தை உறுதிப்படுத்த, நாம் பல வகைகளிலும் முயலவேண்டுமென்பது திண்ணம்.

அவருடைய 'என் ரோஜாம்பா' என்ற பாடலைப் பாடிப்பாருங்கள். இது ஸ்ரீ அரவிந்த மகான் ஆங்கிலத்தில் பாடியிருக்கும் 'ரோஜா' பாட்டை ஒத்திருக்கிறது.

"ஆடு ரோஜாவே—காலை
அழகு ரோஜாவே,
பாடுந் தென்றலுடன்—மனம்
பரவும் ரோஜாவே!

கடிய முள்ளிடையே—நீ
கனிநகை புரிவாய்,
கடிய முட்களெல்லாம்—உன்னைக்
காக்கும் வாட்கணமோ?

'மின்னல்' பாட்டு மின்னிக்கொண்டு வருகிறது. 18 வரிகளில்; மின்னல், ஆகாசத்திலும், பூமியிலும் கவிஞன் உள்ளத்திலும் விளையாடுகிறது; இருளை வெட்டுகிறது மின்னல்.

"மேகத் திரையைப் பிளந்து விரைகின்றாய்—மின்னலே-ஒரு
மோகன மின்சாரங்காட்டி மறைகின்றாய்—மின்னலே!
தாகந் தணியத் தணல்நகை செய்கின்றாய் மின்னலே, என்னைச்
சோகத்தில் ஆழ்த்தி நீ சொக்கி மறைவதேன்? மின்னலே!
நில்லு நில்லெனக் கெஞ்சிடுவேன் உன்னை—மின்னலே—இங்கு
நில்லா உலகியல் வாழ்வெனச் செல்லுவாய்—மின்னலே!
சிற்றிடை துவளச் செங்கால் வீசுவாய்—மின்னலே—உன்னைப்
பற்றிக் கொள்வேனென் றேபயந்தோடினாய்!—மின்னலே!
தடதடவென் றிடிமுர சார்த்திட மின்னலே—நீ
நடனமாடு நயமென்ன சொல்லுவேன்—மின்னலே!"

---

* A. C. Bradley—* John Livingston Lowes.

இனிக் 'கவிக்குருவி' என்ற பாட்டின் மொழிவனப்பைப் பாருங்கள்: கருத்து கவிஞன் உள்ளத்திலிருந்து குமுறிக்கொண்டு வருகிறது.

"புள்ளுருக் கொண்டுவந்தேன்—உன்னுடன்
பொங்கி மகிழ்ந்திடவே
துள்ளுமனச் சிறகால்—வானைத்
துருவிக் கொண்டுவந்தேன்."

"நாதக்கனவினிலே—பிடித்திருந்த
ஞாலத்தைக் கொண்டு வந்தேன்
காதல் பெருகுயிரை—உனக்கே
காணிக்கையாய்க் கொணர்ந்தேன்."

"ஆகாச வீதியெல்லாம்—சகியே
ஆனந்த வீதியடி!
தேகச் சுமையறியோம்—கவலையாற்
சித்தந் தளர்ந்தறியோம்."

இது ஷெல்லியின் வானம்பாடி (Skylark) போன்றது. இனி "காலக்கன்னிகை" என்ற பாட்டைப் பாடுவோம்:

"கன்னத்திற் கையினை வைத்தொரு கன்னிகை
கால வெள்ளத்தின் கரையினிலே
வன்னப்பொற் சித்திரப் பாவையைப் போலொரு
வார்த்தையும் இன்றித் தனித்திருந்தாள்.

"கத்தி யெடுத்துக் குத்திடும் ஓர் அலை;
கனன்று செங்கனல் கக்குமொன்று
மத்த மதக்கரி போலொரு பேயலை
வாழும் பயிரினை வாரிச்செல்லும்.

"வெள்ளைப் புயலொன்று வீசுதுபார்—அதன்
வேகத்திரை எமன் வாகனமாம்!
கொள்ளையும் சாவும் கொடுமையும் தீமையும்
கொட்ட மடித்துக் குரைப்பதைப் பார்!

"ஊழி யிடிக்குலம் உறுமி வெங்கனல்
ஊற்றி மனிதரை வாட்டுதம்மா!
ஆழித் திரைகள் இரத்தம் பெருகி
ஹுரஹுரா என்றங் கலறுதம்மா!

"காலக் கன்னியின் மணவாளன்—அவன்
காக்குங் கடவுளென்றே யறிந்தேன்.
ஞால மெல்லாமவன் லீலை யென்போன்—எந்த
நாளும் அவனையே நம்பிடுவோம்!"

'காலக்கன்னிகை' மிக அருமையான காவிய சரித்திரம்: இந்தப்படத்தில், 'காலம்' குமுறிக் கதறிக் கொந்தளித்து, இறுதியில் இறைவன் உள்ளத்தில் சாந்தியடைகிறது.

சுத்தானந்தரின் கவிதையில், கருத்தின் கொந்தளிப்பில், சொற்கள் இனிய எளிய சொற்கள் சில சமயங்களில் சூறையாடப்படுகின்றன: சொற்களின் சலனத்தில், கவிதையும் குமுறிக் கரைந்துவிடுகிறது. சில இடங்களில் ஊழி நெருப்பையும் ஊதியெறியும் தன்மை, அவருடைய மொழி மின்சாரத்தில் அமைந்து விடுகிறது. நல்ல கற்பனை உண்டு, நல்ல உணர்ச்சி உண்டு, நல்ல நடைவெறி உண்டு; கருத்துக்கள் உள்ளத்தி

லிருந்து வெடித்து வருகின்றன. உன்னத ஆராய்ச்சியில், நாம் அறிந்து கொள்ளும் உண்மைகளே இவைகள்.

'யசோதரையும் சித்தார்த்தனும்' என்ற தலைப்பில் ஒரு பாட்டைப் பாருங்கள். சித்தார்த்தன் பாடுகிறான்:


"வாடி யுதிர்ந்த மலரைக் கண்டும்
வாழ்வை நம்பவோ—கண்ணே,
கோடி யுயிரைச் சாவு நாளும்
கொண்டு போகுதே!"

யசோதா பதில் இறுக்கின்றாள்:

"உதிர்ந்த பூக்கள் உரமதாகும்;
உதிக்கும் புதும்லர்—கண்ணே,
முதிர்ந்த கனிகள் வீழ்ந்து விதைகள்
முளைப்ப தியற்கையே!"

வாழ்வைப்பற்றிய சஞ்சலமும் சலனமும் இந்தச் சித்திரத்தில் சுழன்று சுழன்று வருகின்றன. துன்பத்தை விளக்கும் இன்பச்சித்திர மல்லவா இது! இசைச்சித்திரமும் கூட!

---




## முன்யோசனை இல்லாவிடில்?—பலன் இதுதான்.

முன்யோசனையின்றி வாழைப்பழத்தோலை நடுத்தெருவில் வீசி எறிந்து விடுவது சிலரின் வழக்கமாகிவிட்டது. அதன் பலன், பலர் விழுந்து அவஸ்தைப்படுவதுதான். அவ்வாறு ஸ்ரீமான் கனபாடிகளவர்கள் விழும் சமயம் சற்றும் முன்யோசனையின்றி ஸ்ரீமான் சாரண சிங்கம் உதவப்போனால்? கனபாடிகளின் கனம் எப்பேர்ப்பட்டது!

# இதய ஒலி

63-வது நாவல்

வை. மு. கோதைநாயகி அம்மாள்



## 1

"உலகத்தையெல்லாம் ரக்ஷிக்கும் பரம பிதாவாகிய, பக்தவத்ஸலன் சகல ஜீவராசிகளையும் காக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கையில் நமக்கேன் வீண் கவலை? பொம்மையா கோபுரத்தைத் தாங்குகிறது? அவன் திருவடி நிழலைவிட உன்னைக் காக்கும் பொருள் இவ்வுலகத்திலேயே இல்லை என்கிற தத்துவத்தை என்னவோ என் மனம் நன்கறிந்துதான் இருக்கிறது. இந்த மந்திர வாக்யங்கள் என்னிதயத்தில் சதா ஒலித்துக்கொண்டுதானிருக்கின்றன. எனினும் மூடத்தனத்தினாலும் அஞ்ஞானத்தினாலும் பாசிபோல் மறுபடியும் கவலை வந்து நெஞ்சில் புகுந்துகொள்கிறது. என்ன செய்வேன்?" என்று சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒரு அம்மாள் தன்னெதிரில் வீற்றிருக்கும் தன் சிநேகிதியுடன் கூறினாள்.

**இதய ஒலி**

இதைக் கேட்ட அந்தம்மாள் நகைத்துக்கொண்டே, "காந்தாமணி! உனக்கு வரவர பயித்தியம் அதிகரித்துத் தான் வருகிறது. இல்லாவிட்டால் எதற்காக இப்படி வீண் கவலைப்பட்டு உடம்பை நாசம் செய்துகொள்ளவேண்டும்? திடீரென்று இத்தகைய வேதாந்தமும் ஞான வைராக்யமும் எப்படி வந்துவிட்டன? அவைகளுக்குப் பிறகு இடமிருக்கிறது, போதையும் நேரத்தையும் அப்போது அதற்கே செலவிடலாம். முதலில் நான் சொல்லிய நல்ல காரியத்தைச் செய்ய ஏற்பாடுசெய் பார்க்கலாம். உன் காலத்தைக் கடத்தியதுபோலவே குழந்தை நிருபமாவின் காலத்தையும் பாழாக்கி விடாதே. நாட்டியக் கலைக்கே நிருபமா புத்துயிர் அளிக்கவந்த தேவதையைப்போல்...கலாதேவியின் சாயாபிம்பம்போல் பிறந்திருக்கிறாள். அவளுடைய நடனத்தையும், காண்போர் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொள்ளும் அபூர்வ சௌந்தர்யத்தையும் கண்டு மயங்கிக் காத்துக்கிடக்கிற மைனர்களின் எண்ணிக்கை...

காந்:—போதும் போதும். ஸீதா! உன் வார்த்தைகளை நிறுத்து. இதைக் கேட்கும் பரிபக்குவம் எனக்கில்லை, அதிலும் என் நிருபமாவின் விஷயத்தில் இந்த பேச்சே வேண்டாம். பகவானை பஜிப்பதற்கும் சத்சங்கத்தில் பழகி நாம பஜனை செய்வதற்குமா காலம் இருக்கிறதென்கிறாய்?... ஐயோ! இவ்வுடலையும் இவ்வாழ்க்கையையும் சதமென்று நினைத்துப் பேசுகிறாய். நேற்று என்னோடு இன்னேரம் பேசிக்கொண்டிருந்த அம்மணியம்மாள் இரவு மாரடைத்து உடனே மறைந்துவிட்டாள். இத்தகைய அநித்ய வாழ்க்கையை நித்யமென்று நம்பி பகவானை மறப்பதா ஒரு பெருமை? இந்த ஊற்றைச் சரீரத்தை எரி எனக்கென்னும், நரி எனக்கென்னும், நாயோ, சரிசரி! எனக்குத்தான் என்னும்; கழுகும் காக்கையுமோ, எங்களுக்குத்தான் சொந்தம் என்னும்...கபவாதபித்தாதிரோகங்களில் சிக்கி உழலும் சமயமா நாம் அந்த ஸ்ரீமந் நாராயணனின் நாமத்தைச் சொல்லமுடியும்?...

ஸீதா:—காந்தாமணீ! இந்த புராணம் எனக்கு வேண்டாம். நான் வந்த காரியத்தைச் சொல்லிவிட்டுப் போகிறேன். நமது நாகரத்தினத்தின் பிள்ளை இருக்கிறானே! அவன் ஒரு சினிமாக் கம்பெனி ஆரம்பிக்கப் போகிறானும். உயர்ந்தகுல ஸ்த்ரீகளெல்லாம் சினிமாவில் ஆடிப்பாடி சந்தி சிரிக்கிறார்கள், நாமோ தேவதாசிகள். உன் மகள் நிருபமாவை...

என்று மேலே கூறுவதற்குள், காந்தாமணி சற்று ஆத்திரத்துடன் "ஸீதா! நீ போய் வா! உனக்குப் புண்ணியமுண்டு. அதோ நாட்டியக்காரர் வந்துவிட்டார். எனக்கு வேலை இருக்கிறது. உயர்ந்த குலப் பெண்கள் கலை கலை என்று சொல்லிக்கொண்டு தமது மேன்மையை, தமது கண்ணியத்தை, தமது விலை மதிப்பற்றக் கற்பை...மனங்கூசாது கொலைசெய்து நாசமாவதைப்போல் நாமும் போகவேண்டுமோ! உன்னுடைய அத்புதமான யோசனை எனக்கு வேண்டாம்." என்று கூறிக்கொண்டே எழுந்து மாடிக்குப் போய்விட்டாள்,

சௌந்தர்ய தேவதையின் சாயாபிம்பம் என்றால் மிகையாகாது. அத்தகைய ரூபவதியான நிருபமாவின் நாட்டியமும் அதை விஞ்சியே இருந்தது. வயதோ, மிகச் சிறியது; 14 கூட நிறைபவில்லை. அவளுடைய நாட்டியத்தின் திறமையோ, வெகு அனுபவப்பட்டவர்களைவிட அதிகமான சோபையுடன் ப்ரகாசிப்பதைக்கண்டு இக்கலையில் ஆர்வங்கொண்டுத் தம் தம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் பெற்றோர்கள் சிறிது பொறாமையே கொண்டார்கள்.

காந்தாமணி பிறப்பில் தாசிதான். கோயில் முத்திரைபோட்டு முறை கைங்கர்யமும் செய்பவள்தான். ஆனால் மற்ற தாசிகளைப்போன்று கேவலமானதொழில் நடத்த அவள் மனது இசையவில்லை. தாசிகளுக்கும் அந்தரங்கமான பரிசுத்த இதயம் உண்டு; அவர்களுக்கும் ஒப்புயர்வற்ற காதல் உண்டு என்பதை வாழ்க்கையில் நிரூபித்துக் காட்டுபவள்.

தற்போது அவளுடைய உயிர்நிலை முற்றும் நிருபமா ஒருத்திதான். அவளுக்கு நாட்டியம் கற்றுவைத்ததை அரங்கேற்றுவதற்கு நாள் பார்த்திருந்தாள். அவளுடைய முகத்தில்மட்டும் சதா கவலையும் ஒருவிதமான ஏக்கமும் குடிகொண்டிருந்தது. அதன் ரகஸியம் அவளது ஆவியுடன் பிணைக்கப்பட்டுப் புதைந்து கிடந்தது.

நாளை அரங்கேற்றுவிழாவானதால் தனது கவலைகளை ஒருவாறு அடக்கிக்கொண்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்து, தனக்கு மிகவும் வேண்டியவர்களையெல்லாம் அழைத்தாள். அவள் மிக்க செல்வம் படைத்தவளல்ல. சங்கீதத்தைச் சிலருக்குக் கற்றுக்கொடுத்து அந்த வருமானத்தைக்கொண்டு மிகவும் சாதாரணமாகக் காலக்ஷேபம் செய்பவள்தான்.

அன்று அரங்கேற்று கச்சேரியின் அத்புதத்தைக் கூறமுடியாது. பரதநாட்டிய சாஸ்திர நிபுணர்களெல்லாம்; கண்டுவியந்து ஆனந்தத் தாண்டவம் புரிந்தார்கள். 'இக்குழந்தை சாமானியமான பெண்ணல்ல; கலாதேவியின் இன்னருளை பரிபூர்ணமாகப்பெற்றவள். அடாடா! என்ன அற்புதம்! என்ன ஆனந்தம்! அக்குழந்தையின் முகத்தில் ஜ்வலித்த பாவத்தின் அழகைத்தான் என்னென்பது! எத்தனையோ வருஷங்களாகக் கைதேர்ந்து நடிக்கும் ஒருத்திகூட இவள் எதிரில் நிற்கமுடியாதல்லவா! என்ன தெய்வீக உணர்ச்சியுடன் ஆடினாள்!' என்று வந்த ஜனங்கள் அத்தனைபேரும் வெகு உத்ஸாகத்துடன் இதயபூர்வமான ஆனந்தத்துடன் கொண்டாடினார்கள். அங்கு வந்திருந்த பல வாலிபர்களுக்கு இப்பெண்ணைத் தாம்தான் மணக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் இலேசாகப்பதிந்தது. தம் தம் குழந்தைகளுக்கும் இந்த அபூர்வகலையைக் கற்றுவைக்கவேண்டும் என்கிற எண்ணம் அநேக பெற்றோர்களின் உள்ளத்தில் பொங்கி எழுந்தது.

பரதநாட்டியத்தின் மகிமையறியாது அதை தூஷிக்கும் சில ஆத்மாக்கள்கூடத் தம்மையறியாது சபாஷ்போட்டுப் பூரித்தார்கள். நாட்டியத்தைக் கண்டு புகழ்ந்த பலர் காந்தாமணியிடம் நேரிலேயேபேசி குழந்தைக்குப் பரிசும் கொடுத்தார்கள். கூட்டம் கலைவதற்குள்ளாகவே எங்கிருந்தோ திடீரென்று பெருமழையும், பயங்கர இடியும், கண்களைப்பறித்துக்கொண்டு போகும் மின்னலும் ப்ரமாதமாக வந்துவிட்டன.

அங்கு வந்தவர்களில் பாதிபேர் மழையில் அகப்பட்டுக்கொண்டார்கள். நனைந்துகொண்டு போனவர்களும் வண்டிகளில் போனவர்களுமாகக் கூட்டம் கலைந்து சிதறிவிட்டது. நாட்டியம் சுபமாக முற்றிலும் நடந்து மங்களம்பாடி முடியும்போது மழையும் காற்றும் வெகு கடுமையாக வந்து பந்தலெல்லாம் நனைந்துசொட்டவும் ஓலைகளைப் பிய்த்துக் கொண்டுபோகவுமாக ஆய்விட்டதால் அப்படியே நிறுத்தும்படி நேர்ந்ததானது காந்தாமணியின் மனத்தில் அபசகுனம்போலவும் ஏதோ ஒரு பயங்கரமாகவும் தோன்றி வதைத்தது,

வந்தவர்களுக்கு வழங்குவதற்காக வைத்திருந்த தாம்பூலம் பழவகைகள்கூட சரிவர கொடுக்கமுடியாது பெருங்குழப்பம் உண்டாகியது. பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் பந்தலிலிருந்து ஓலைகளைப் பிய்த்துக் கொண்டு காற்று கன வேகமாகப்பறந்தது. மழைத் தண்ணீர் சர்வ சுதந்

திரத்துடன் உள்ளே ப்ரவேசித்து விளையாடி தரையையும் ஜமுக்காளங்களையும் நனைத்துச் சேறும் சகதியுமாக்கி விட்டது.

## 2

சேர்ந்தாற்போல் நான்கு நாட்களாகிவிட்டன. சூரியன் எந்த உலகத்தில் மறைந்தானோ! அவனது கிரணங்களைப் பார்த்து எத்தனையோ யுகங்களாகிவிட்டதுபோன்று ஜனங்களுக்குத் தோன்றிவிட்டது. எங்கும் பெருமழை; கடுங்காற்று. குடிசைகள் எல்லாம் பிய்த்துக்கொண்டு போன இடந் தெரியாது போய்விட்டன. மழை இன்னும் நின்றபாடில்லை.

எல்லாக்குளங்களும் ஏரிகளும் கிணறுகளும் வாயால்வழிகின்றன. எங்குபார்த்தாலும் ஜலப்ப்ரளயம். சிறியசிறிய ஆறுகளும், ஏரிகளும் உடைப்பெடுத்துக்கொண்டு க்ராமங்களையும் பட்டணங்களையும் த்வம்ஸம் செய்கின்றன. இயற்கையன்னையின் சாந்தம் சிதறுண்டு உக்ரத் தாண்டவம் புரிந்து பல உயிர்களையும் பலிகொண்டுவிட்ட பரிதாபத்தை எப்படித்தான் சகிக்க முடியும்?

வயல்களில் அறுவடைக்குத் தயாராகவிருந்த பயிர்களெல்லாம் நாசம். எட்டடி,பத்தடி தண்ணீரில் மிதந்தும்மூழ்கியும் தத்தளிக்கும் பரிதாபக்காக்ஷியைக் காண விவசாயிகளின் நெஞ்சு வெடித்துவிடும்போல் துடிக்கின்றது.

"ஐயோ! அரைவயிறு கஞ்சி வரும் என்று நினைத்தோமே? இப்படியா ஆய்விட்டது? பட்டினிதானா பலன்! பஞ்சந்தான் கண்ட லாபம்" என்று இதயம் துடிக்கிறார்கள். மாடுகளும் ஆடுகளும் தமது வீடாகிய கொட்டாய் காற்றில் பறந்துபோனதால் குளிரால் விறைத்து உயிரிழந்ததும் இழக்கத்தயாராயிருப்பதும் அப்பப்ப! கண்ருவி கூறமுடியாது.

குடிசையில் வாசம் செய்யும் குடியானவர்களின் பரிதாபம் சொல்லி முடியுமா? எத்தனை கிழங்கள், எத்தனை சிசுக்கள், எத்தனை கர்ப்பிணிகள் எத்தனை நோயாளிகள்! அடாடாடா!...பரிதாபம்...பரிதாபம்...இதைவிட பரிதாபகரமான காக்ஷியைக் காணவே முடியாது.

தமது குடிசைகளும் சட்டிபானையும் தட்டு முட்டு சாமான்களும் காற்றினாலும் வெள்ளத்தினாலும் பறிகொடுத்துவிட்டு, கட்ட மறு கந்தை இல்லாமல், நிற்க நிழலில்லாமல் குளிரினாலும் விரைத்துப்போய் அருகிலுள்ள மலைமீது ஒட்டிக்கொண்டு உட்கார்ந்து வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகும் கோரக்காக்ஷியைக் கண்டு உள்ளம் வெடித்துத் துடிக்கிறார்கள்.

சேர்ந்தாற்போல் நான்குநாள் விடாமலும் பெருமழையாயும் காற்றுடன் கலந்து பெய்த அலங்கோலத்தின் பயனால் ரயில் பாதைகள் உடைந்தன. மின்சாரங்கள் கெட்டு விளக்குகளும், தந்தி, டெலிபோன் முதலிய சாதனங்களும் அழிந்து நகர வாசங்களில் ரிக்ஷா ஜட்கா வண்டிகளுக்கும் பஸ்ஸுக்களுக்கும் திடீரென்று யோகம் பிறந்துவிட்டதுபோல கண்ணை மூடிக்கொண்டு கையை நீட்டிப் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கொப்பப் பறித்தார்கள். தத்தளிப்பில் வயிறெரிந்து திட்டியவாறே பணம் கொடுத்தவர்களும், கால்நடையாகச் சென்றவர்களும் கணக்கில்லை. எங்கு பார்த்தாலும் வெள்ளச் சேதம் பற்றியே பெரும் ஓலம் செவியைத் துளைக்கின்றது. இதயத்தைக் குழப்புகின்றது "ஐயோ! வீடு போச்சே...மாடு போச்சே...பயிர்கள் போச்சே...வயிற்றுக்கிருந்த கால் வயிறு கஞ்சியும் போச்சே...குடிசைகள் பறந்துபோச்சே...மக்கள் மனிதர்களின் தகவல் தெரியாது போச்சே"...என்கிற பேரொலியே எங்கும் மகத்தான ஆக்ரோஷத்துடன் த்வனிக்கிறது.

பச்சாத்தாபமும் கருணையும் நிறைந்த எந்த மனிதர்கள்தான் இத்தகைய காக்ஷியைப் பார்த்துச் சகிக்கமுடியும். இல்லை... இல்லை... என்கிற தீனக்குரல்...பசி...பசி...என்கிற பரிதாபக் குரல் இதயத்தில் ஒலித்து அவர்களைக் குழப்பிவிட்டது. அந்தந்த ஊரைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் எல்லோரும் ஒன்றுகூடி தற்கால சாந்தியாகப் பொருளுதவி செய்து கூழும் கஞ்சியும் வார்த்தார்கள். நான்கு நாட்கள் இராப்பகலாக மலைமீது உட்கார்ந்து தவித்தவர்களில் உலகையேவிட்டு மறைந்தவர்களும் உண்டு. மிஞ்சியவர்கள் மழையும் வெள்ளமும் ஓய்ந்த பிறகு கண்ணைக்கட்டி காட்டில் விடப்பட்டவர்கள்போல் இந்த பயங்கர உலகைப் பார்க்கும் போது கோவெனக் கதறிவிட்டார்கள்.

பெரிய மனிதர்களில் சிலர் இந்த அபாக்ய ஸ்வரூபங்களைப் பார்த்து அவர்களில், இக்கொடிய பயங்கரத்தைச் சகிக்காமல் நோயாகி விட்டவர்களை ஆஸ்பத்திரி இருக்கும் இடத்திற்கு அழைத்துச்சென்று விட்டு உதவி செய்தார்கள். சில கண்ணியமான டாக்டர்கள் தாமே சென்று பார்த்து அவர்களுக்கு இலவசத்தில் மருந்துகொடுத்து உதவினார்கள்.

சிலர் விசாலமாயுள்ள தமது பங்களாவிலேயே ஒரு பக்கம் இந்த பரிதாப ஜனங்களுக்கு இடங்கொடுத்து சிகிச்சை செய்தார்கள். வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனவர்களைக் கூடுமானவரையில் சாரணப் படைவீரர்களும் சிப்பாய்களும் காப்பாற்றிப் பேருபகாரம் செய்தார்கள்.

சாதாரணமான வாலிபர்கள்கூட இந்த ஆபத்தில் மகத்தான துணிச்சலுடன் உதவியளித்தார்கள். நோயாளிகளுக்கும் வெள்ளத்தில் சிக்கி அடித்து வந்து கொத்துயிர் குலை உயிராயிருந்தவர்களுக்கும் உதவி செய்த நூற்றுக்கணக்கானவர்களில் ஸ்ரீமான் டாக்டர். புண்யமூர்த்தியும், அவரது இளைய குமாரன் சிவகுமாரனும் ஆவர்கள்.

புண்ணியமூர்த்தி மகா உத்தமர். அவருடைய பெயருக்கேற்றபடி அவர் சதா புண்ணியத்திற்குப் பாடுபடுவதைச் சிறிதும் வெறுக்கவே மாட்டார். பரோபகாரமே தன் தொழில்; அதுவே தனக்கு சார்த்தகம் என்று ஓயாது நினைத்து உழைத்து இன்புறுவார். நோயாளிகளின் அலறலும், புலம்பலும், தீனவாக்யமும் புண்ணியமூர்த்தியின் வாழ்க்கையில் இதய ஒலியாகவே சதா ஒலித்துக்கொண்டிருக்கும். அவர்களின் பிணி தீர்ந்து சந்தோஷமாகச் சிரிக்கும் காலம் எப்போது வரும் என்று எதிர் பார்த்துத் தமது அவுஷதத்தைவிட மேலான பரம அவுஷதமான தனது அன்புமிக்க தேறுதல் மொழிகளாலேயே ஆற்றிவரும் உத்தமர் அவர்.

சாப்பிடவும், தூங்கவும், வீட்டுசொந்த அலுவல்களைக் கவனிக்கவும் கூட, அவகாசமில்லாத அத்தனை பெரிய பெயரும் கீர்த்தியும் வாய்ந்து விட்டதால் ஓயாத உழைப்பாளியானார். அந்த உழைப்பில் அவர் அடைந்த இன்பத்தின் எல்லையை யாராலும் அளவிட்டறியவே முடியாது.

பந்துக்கள் என்றும், சினேகிதர்கள் என்றும், ஏழைகள் என்றும் வித்யாசமின்றி அவர் நடத்தும் முறையே அவருக்கு அழியாத புகழைக் கொடுத்தது என்றால் மிகையாகாது. நோயாளிகள் பாதிராத்திரியில் வீட்டிற்கு அழைத்தாலும் அப்போதும் சிரித்தமுகத்துடனும் அன்பு ததும்பும் பார்வையுடனும் தியங்காமல் முகம் சுளிக்காமல் எழுந்துவருவார்.

இத்தகைய சிறந்த அம்சங்களுக்காக அவரிடமே நோயாளிகளின் கூட்டமும் ஆதிமுதல் பெருகியது. நல்ல பெயருக்கேற்ற நல்ல வருமானமும் இருப்பதால் தனித்த ஆஸ்பத்திரியே வைத்து சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறார். அந்த ஆஸ்பத்திரியின் கட்டிடம் இப்போது நிரம்பிவிட்டது.

எங்கு பார்த்தாலும் ஒரே நோயாளிக் கூட்டமும் இருமலின் பேரொலியும், ஐயோ ! அப்பா ! என்கிற முனகலின் சப்தமும் சூழ்ந்துகொண்டன.

தன் ஆஸ்பத்திரி நிறைந்துவிட்டதால் சிலரை வெளியேயுள்ள ஆஸ்பத்திரிகளுக்குத் தாமே அனுப்பினார். நோயாளிக்கு மருந்துகொடுத்து குணப்படுத்துவது சுலபந்தான். ஆயிரக் கணக்கானவர்களுக்கு நிற்க நிழலின்றிக் கட்டக் கந்தை இன்றி தவிக்கும் தவிப்பை எப்படி இத்தனை எளிதில் தீர்த்துவிடமுடியும்?

பெரும்மழையால் வந்த உக்ரகத்தாண்டவம் தீர்ந்து மேலே ஒருவாரமாயிற்று. புண்ணியமூர்த்தியின் மனைவியாகிய ஸ்ரீமதி கீர்வாணிதேவி இயற்கையிலேயே சற்று நல்லவள்தான் எனினும், தன் கணவனின் ஓயாத உழைப்பும் சதா சர்வகாலமும் பணத்தைத் தண்ணீர்போல் அள்ளி அள்ளிக்கொடுக்கும் செய்கையும் அவளுக்குப்பிடிக்கவில்லை. அந்த விஷயத்தில்மட்டும் புருஷன்மீது சற்று கோபமே கொண்டாள்.

எந்தநேரமும் வேளைசமயம் இல்லாமல் வீட்டில்வந்தவர்களுக்கெல்லாம் சதாசாப்பாடுதான். திடும் திடும் என்று கூட்டங்கூட்டமாக வரும் ஏழைகளுக்குச் சாப்பாடுபோடும்படிக் கட்டளைபிறந்து விடும். அப்போதெல்லாம் கீர்வாணியம்மாள் முகம் சிவக்கும். அந்தம்மாளின் உதரத்திலேயே ப்ரத்யக்ஷமாக அவதரித்ததை நிரூபிக்க அவர்களின் மூத்தகுமாரனாகிய சுகுமாரன் தாயாரின் நிழல்போல் இதுவிஷயத்தில் மட்டும் தாளம் போடுவான்.

தகப்பனார் ஆனந்தமாகக் கட்டளையிடுவதைத் தாயும் மகனும் சிடுசிடு கடுகடு என்கிற தாண்டவத்துடன் கடனே என்று செய்து தூஷிப்பார்கள். சில சமயம் டாக்டரே பக்கத்தில் நின்று கவனிப்பதும் உண்டு. அது மிகவும் அபூர்வம். அவருக்குத் தான் சாப்பிடவும் ஓய்ந்தால்தானே...

இந்த காற்றுமழை வெள்ளத்தில் இரவுபகலாக ஓடி ஓடி உழைத்ததில் அவருக்கே இரண்டு மூன்றுநாள் நல்லஜுரம் வந்துவிட்டது. அதைக்கூட அவர் லக்ஷ்யம் செய்யாது தனது லக்ஷ்யத்திலேயே கண்ணுங்கருத்துமாய் உழைத்து வந்தார். அவராலும் முடியாதுபோய் சற்றுபடுக்கையில் படுத்துக் கண்ணயர்ந்தார். வீடுவாசல் இல்லாது தவிக்கும் பரதேசிகளை, ஒரு கூட்டமாக கூட்டிக்கொண்டு அவ்வூர் நாட்டாண்மைக்காரன் வந்து வீதியில் நின்று, “ஐயா ! ஐயா ! மகாப்ரபுவே !” என்று கூப்பிட்டான். புண்ணியமூர்த்தியின் படுக்கை அறை பின்புறத்துத்தோட்டத்துப் பக்கமாக உள்ளது. வீதியில் யார்வந்து கத்தினால்கூட காதுகேட்காது. வீதியில் இந்த கூட்டத்தையும் அவன் கூப்பிடுவதையும்கண்ட கீர்வாணியம்மாளுக்கு கோபமும் எரிச்சலும் பொத்திக்கொண்டு வந்தன. “ஒரு நிமிஷம் நிம்மதியாகப்படுக்கவிடாது இதென்ன உபத்திரவக்கூட்டமோ! சனியன்பிடித்த எழவு! விடிந்தால் அஸ்தமித்தால் இதே தொல்லைதானா!” என்று முணுமுணுத்தபடியே வீதிக்குவந்து அவனைப் பார்த்து...“ஐயா வெளியே போயிருக்கிறார். இப்போபார்க்கமுடியாது. அவர் வருவதற்கு இரவு 10மணியாகும்” என்று பெரிய ஒரு புளுகுமூட்டையை கூசாது அவிழ்த்தாள்.

“அம்மணி! எஜமான் உள்ளே இருப்பதாக வேலைக்காரன் சொன்னானே! தயவுசெய்து கூப்பிடுங்கள்.” என்று வெகு வணக்கமாக நாட்டாண்மைக்காரன் சொன்னான். கீர்வாணியம்மாளின் கோபம் வேலைக்காரன்மீது தாவியது. இந்தம்மாள் அந்த அப்பாவி வேலைக்காரனைத் திட்டுவதற்காக வேகமாக உள்ளே செல்லும்போது அந்த வேலைக்காரனுடன் டாக்டரும் புன்முறுவலுடன் வருவதைப்பார்த்ததும் கோபம்மட்டும் இருந்த

தோடு, அந்த அல்பாயுஸ் வேலைக்காரனை அடித்து நொருக்கிவிடலாமா என்கிற ஆத்திரமும் கூடவே உண்டாகியது.

பல்லைக்கடித்துக்கொண்டே அந்த ஆளை உருட்டி உருட்டிப்பார்த்தாள். அதற்குள் அவன் உள்ளே ஓடிப்போய் எஜமானுக்கு ஒரு நாற்காலி கொண்டுவந்து போட்டுவிட்டு எஜமானியைப் பார்க்காமலேயேபோனான்.

டாக்டரின் மூத்தமுகன் இந்த கூட்டத்தை விரட்டியடிப்பதற்காகவே மாடியிலிருந்து வேகமாக ஓடிவந்தான். ஆனால் சாந்தமூர்த்தியாகிய அவ்வுத்தமர் அங்கு சாவதானமாக உட்கார்ந்து பேசுவதைக்கண்டு அப்படியே முகத்தைச்சுளித்துக்கொண்டு நின்றுவிட்டான்.

கீர்வாணியம்மாள் மட்டும் வெகு தைரியத்துடன் நாற்காலியின் பின்னாலேயே வந்துநின்றாள். எதற்காக?...அந்த ஏழைகளுக்காக பண உதவிசெய்வதை கணக்கில்லாது எங்கே ஏற்றிவிடுகிறாரோ! அதை வெளிப்படையாகவேகூறிக் குறைத்துவிடலாம் என்கிற எண்ணத்துடன் வெகு சாந்தவதிபோல் நின்றாள். நாட்டாண்மைக்காரனைப் பார்த்ததும் புண்ணிய மூர்த்தி சந்தோஷமாக உபசரித்து விசாரித்தார். அங்குள்ள அத்தனை ஜனங்களும் வெள்ளத்தினால் வீடிழந்தவர்கள் என்பதை அறிந்து பரிதாபத்துடன் அவர்களைப் பார்த்தார். வேறு பேச்சே இல்லை. "நாட்டாண்மைக்காரரே! நாளை சாயங்காலம் என்னை வந்துபாரும். இவர்களுக்கு இரண்டு நாளைய் ஆகாரத்திற்கான ஏற்பாடுகளை ஆச்பத்திரி மேனேஜர் மூலம் செய்திருக்கிறேன். அங்குபோய் பாரும்.

என்ன பரிதாபம்! காத்தடித்தாலென்ன! கடும் வெள்ளந்தான் கரை புரண்டால் என்ன? கோட்டைபோல் வீட்டிற்குள் உட்கார்ந்திருப்பவர்களில் சிலர் இந்த உலகத்திலேயே தாம் இருப்பதாகவே நினைக்காமல் வரண்ட சூனிய உணர்ச்சியுடன் இருக்கிறார்கள். என்ன கண்ராவி!...... பாழாப்போன மானம் திரும்பவும் மூடுகிறதே. மறுபடியும் மழை வந்துவிட்டால் இத்தனை ஜனங்களும்...உம்...கண்ணில் படாத இன்னும் எத்தனை ஜனங்கள் தவிக்கின்றார்களோ! அவர்கள் எப்படி நிற்பார்கள்? நிர்க்கதியாக உள்ளவர்கள் எங்கு தங்குவார்கள் பாவம்!...ஈசா! உனக்கென்னப்பா இத்தனை உக்ரகம். ஏழைகளைத் துன்புறுத்துவது உனக்கு விளையாட்டா! ஐயோ பாவம்! அவர்களுடைய பொறுமையைச் சோதித்தது போதும். மழையை இனி உன் கருணையால் நிறுத்தலாகாதா!" என்று தனக்குள் எண்ணி சிந்தாக்ராந்தரானார்.

அந்த ஏழைகள் "சாமீ! நிக்க நிழலில்லையே...உடுக்கக் கந்தையில்லையே"...என்று கண்ணீர் வழிய உள்ளம் உருக ஓலமிட்டுக் கும்பிடு போட்ட பரிதாபம் அவருடைய பரிசுத்தமான இதயத்தில் ஒலித்துக்கொண்டிருந்தது.

## 3

"அம்மா! அம்மா!...டாக்டர். புண்யமூர்த்தியவர்கள் உன்னைப் பார்க்க வந்திருக்கிறார். 'உள்ளே வரலாமா?' என்று கேட்கிறார்" என்று நிருபமா ஓட்டமாக ஓடிவந்து தன் தாயாரைக் கேட்டாள்.

காந்தா:—டாக்டர் புண்ணியமூர்த்தியா......அந்த மகானுபவனா என்னைப் பார்க்க வந்திருக்கிறார்!...இதோ நானே வந்து அவரை அழைத்து வருகிறேன்—என்று ஆவலே வடிவாய் எழுந்து ஓடிவந்து,..."ஸ்வாமி! இதென்ன அபூர்வமாயிருக்கிறது. தங்களைப்போன்ற புண்ணியாத்மாக்கள் பாததூளி படுவதற்கு இக் குடிசை என்ன பாக்யம் செய்ததோ? வாருங்கள் வாருங்கள்"...என்று மெய் சிலிர்க்கும் உபசாரத்துடன் அழைத்துவந்து

ஆசனத்திலமரச்செய்தாள். அவளது உள்ளம் அவனேயறியாத ஆனந்தத்தில் மிதந்தது.

புண்:—காந்தாமணி! இப்படி உட்காரு. எப்போதும் ஒரு நோய்வந்து என்னையழைத்தாலன்றி விசேஷங்களுக்குக் கூட வருவதில்லை என்றுஎன்னை நீ எத்தனையோதரம் குற்றம் சாட்டியிருக்கிருயல்லவா? அதனல் இன்று நானகவே வந்தேன். காற்றுமழையும், வெள்ளமும் போதுமா?

காந்தா:—அடாடாடா! என்னகொடுமை, என்ன கொடுமை. எனக்கும் குட்டிச்சுவர்போல் வயதாகிறது. இத்தனை வயதில் நான் இம்மாதிரி ஒரு மழையையும் கோரத் தாண்டவத்தையும் கண்டதுமில்லை: கேட்டதுமில்லை. ஒரு ப்ரளயம் வந்ததுபோலல்லவா இந்த மழை செய்துவிட்டது. பேஷான கட்டிடத்தில் ஜம்மென்று உட்கார்ந்திருப்பவர்களுக்கு என்ன சங்கடம் தெரியப்போகிறது? எத்தனையோ க்ராமம்க்ராமமாக முழுகிவிட்டனவாமே? ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் குடிசைகள் இன்றித் திண்டாடுகிருர்களாமே...கலியுகத்தில் கர்ணனைப்போன்றுள்ள தாங்கள் இச் சமயம் செய்துள்ள பேருபகாரம் கூறமுடியுமா! கோடிக்கணக்கான ஜனங்களின் இதயத்தில் தங்கள் புனிதமான சேவை ஒலித்து வாழ்த்திக்கொண்டிருக்கின்றது. ஏதோ அணிலும் மணல் திரட்டியதுபோல் என்னலாகியது 50 ரூபாய் கொடுத்தேன். இதைச் சொல்லிக்கொள்ளக்கூட வெட்கமாயிருக்கிறது.

புண்ய:—வெட்கமாயிருக்கிறதா! அப்படிக்கொன்றும் வெட்கப்படாதே. இது விஷயமாக உனது பரிபூர்ண உதவியைத்தான் நாடி வந்திருக்கிறேன். நீ கட்டாயம் சகாயம் செய்வாய் என்றே நம்புகிறேன். எத்தனையோ ப்ரபுக்களை போய் நேரில் கேட்டதில் தாராளமாக 5, 10 ரூபாய்கள் கொடுத்துவிட்டு வெட்கப்படாமல் கம்பீரமாக இருக்கிருர்கள். பின்னும் சில ப்ரபுக்களோ, எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பதுபோல் நெல்லையும் அரிசியையும் கண்ணை மூடிக்கொண்டு ஏக விலைக்கு விற்று ஏழைகளின் மனத்தை நோகவடித்துத் தாம் த்ருப்தியடைந்தார்கள். அத்தகையவர்களின் பயிர்களை பகவான் அழித்துவிட்டதற்காக துக்கத்தில் ஆழ்ந்துபோய்விட்டார்களாம். 'நாங்களும் தத்தளிக்கையில் அவர்களுக்கு எங்கு உதவுவது?' என்று வாய் கூசாது சொல்லுகிருர்கள். அங்ஙனமிருக்க நீ சாதாரண மனுஷி, லக்ஷாதிகாரியில்லை. ஆயிரம் இரண்டாயிரம் வருமானமில்லை. மாதம் 100 ரூபாய்கூட வருமானமில்லாத நீ 50 ரூபாய் கொடுத்ததானது 5000 ரூபாய் கொடுத்ததுபோலல்லவா தோன்றுகிறது. கடவுள் கிருபையில் நீ, 5000 இல்லை, 10,000 கொடுக்கவும் வழிகாட்டியிருக்கிருர். உன் மனது வைத்தால் செய்யலாம்.

காந்தா:—ஸ்வாமி! தாங்கள் இத்தனை பீடிகையே போடவேண்டாம். என்னிடம் இச் சிறிய வீட்டையும் ஏதோ கொஞ்சம் சங்கீதத்தையும் தவிர வேறு என்ன இருக்கிறது?...

புண்ணிய:—(இடைமறுத்து)... இரு காந்தா...பயந்துவிடாதே! உன் மகள் நிருபமா அன்று அரங்கேத்துப்படி செய்ததை வேலைத் தொந்தரவால் நான் ஒருமணி காலங்கூட சரியாகப் பார்க்கவில்லையெனினும் அந்த அபூர்வ குழந்தையின் நாட்டியம் என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டது. கடைசிவரையில் பார்த்த ஒவ்வொருவரும் ப்ரமித்துப்போய் அபாரமாகப் பேசிக்கொண்டதைக் காதாரக் கேட்டு ஆனந்தமடைந்தேன், அதே குழந்தையின் நாட்டியமும் உன் சங்கீதமும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உதவக் காத்திருக்கிறது...

காந்தா:—உண்மையாகவா ஸ்வாமீ! தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள். இந்த பாபாத்மாவுக்குத் தாங்கள் எப்படிக் கட்டளையிட்டாலும் அப்படி நடக்கச் சித்தமாகவிருக்கிறேன்.

புண்ணிய:—காந்தா! அத்தகைய தாராளமான மனதிருந்தால் போதும். உன்னுடைய நிருபமாவின் நாட்டியத்திற்குப் பின்னணி கீதம் நீயே பாடவேண்டும். ஆண்பிள்ளையின் பாட்டு சோபிக்கவில்லை என்பதே என்னபிப்பிராயம். பக்க வாத்யங்கள், விதவிதமான உடைகள், மற்ற இதர சாமான்கள் இவைகளுடன் நீ ஒரு சிறு யாத்திரை கிளம்பவேண்டும். நான் மற்ற சகலவிதமான ஏற்பாடுகளும் செய்துவிடுகிறேன். பொறுக்கினாற்போல் சில ஊர்களுக்குச் சென்று கலா தேவியின் அருளால் நாட்டியமாடினால் ஏராளமான பணம் கிடைக்கும். அந்த பணத்தில் சுருக்கமான செலவுபோக மிச்சத்தை அப்படியே இந்த ஆபத்ஸகாய நிதிக்குக் கொடுத்துவிடவேண்டும், இவ்வளவுதான்...என்னும்மா நிருபமா! இப்படிவா...உன் திறமை பூராவும் காட்டி நாட்டியமாடி ஏழைகளுக்கு உபகாரம் செய்கிறாயா? இந்த புண்ணியம் உன்னை எழேழுதலைமுறைக்கும் காக்கும். என்ன சொல்கிறாய்?

காந்தாமணியின் உள்ளம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. தாசிகுலத்தில் பிறந்துவிட்டாளேயன்றி கேவலமான தாசி வகுப்புகளில் அவள் உறவாடுவதே இல்லை. தாசிகளுக்கே காந்தாமணி என்றால் இளப்பம். அதோடு நிருபமாவின் அபூர்வ நாட்டியத்தைக் கண்டு பொறாமை வேறு. அவளைக் கைதூக்கி ஆதரிக்க யாருமில்லையெனினும் அதோகதியாக்கிவிடச் சதி செய்யும் கூட்டம் காத்திருக்கிறதை அவளறியாமலில்லை.

அத்தகையவளுக்கு, தனக்கு உதவிக்கு உதவியுமாயிற்று, தன்னால் ஏழைகளுக்கு உபகாரமும் ஆயிற்று என்கிற சந்தோஷம் பூரித்தது. அதோடு புண்ணியமூர்த்தியே தன்னிடம் இந்த உதவியை நாடிவந்ததானது அவளுக்குக் கூறத்திறமற்ற மகிழ்ச்சி உண்டாக்கியது. நிருபமாவும் தனக்கு மிகவும் இஷ்டம் என்பதை முகமலர்ச்சியினால் தெரிவித்தாள். காந்தாமணி முழுமனத்துடன் ஒப்புக்கொண்டு "ஸ்வாமி! இவ்வடியாளின் பாபத்தைத்துலைக்கவும், ஒரு சிறிது உபகாரம் இந்த ஈனஜென்மத்தினால் பிறருக்கு உண்டாகவும் பேருதவிசெய்த தங்களை வணங்குகிறேன்...இதோ இந்தப்பழங்களையும் பாலையும் தயவுசெய்து சாப்பிட வேண்டும்" என்று கெஞ்சினாள்.

புண்ணியமூர்த்தி மரியாதைக்காக கொஞ்சம் சாப்பிட்டுப்பின் "காந்தாமணி! அடுத்த புதனன்று ப்ரயாணத்திற்குச் சித்தமாகிவிடு. கைச்செலவுக்கு இந்தா 200 ரூபாய். நான் வரட்டுமா! பயப்படாதே, தைரியமாய்க் கிளம்பு. எனக்கு ஓய்விருந்தால் நானேகூட வந்து சில கறவை மாடுகளிடம் நேரிலேயே கறப்பேன். எனக்கு ஓய்ச்சல் ஒழிவே இல்லை. இந்தப்புதிய வெள்ளத்தின் விபரீதம் வ்யாதிகளை அதிகமாக்கிவிட்டதால் என்போன்ற தொழிலாளிகளுக்கு ஓய்வு என்பதே இல்லை...முடியுமானால் ஏதாவதொரு ஊருக்கு வருகிறேன்...நிருபமா! நான் வரட்டுமா! உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு"...என்று தைரியமும் உத்ஸாகமும் கூறிக் கிளம்பினார். காந்தாமணியும் நிருபமாவும் வீதிவரையில்வந்து வழியனுப்பினார்கள். அக்கம் பக்கம் உள்ளவர்கள் புண்யமூர்த்தியின் வரவையும் காந்தாமணியின் வினயத்தையும் கண்டு தம் தம் மனம்போனவாறு நினைத்துப்பேசிக்கொண்டார்கள். யார் எதைப்பேசினால் யாருக்கென்ன வந்தது? புண்ணியமூர்த்தியின் காரியம் ஜெயித்த சந்தோஷம், அவர் மனம்நிறைந்த ஆனந்தத்தைக் கொடுத்தது. "இந்த முயற்சி வெற்றி

பெறவேண்டுமே அதனால் உதவி கிடைப்பதோடு இச் சிறுமிக்கு ஏராளமான புகழ் வரவேண்டுமே!" என்று அவர் மனது பகவானை வேண்டியது.

முதல் காரியம் ஜெயமாகியதிலிருந்தே அவர் உள்ளம் ஆனந்தித்ததோடு பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு குடிசைகள் போட்டுக்கொடுத்து அன்னமிட்டு, உடைகள் வாங்கி வழங்கியதாயும், அந்த அபாக்ய ஆத்மாக்கள் அதைக்கண்டு சந்தோஷப்படுவதாயும் ஒரு தோற்றம் உண்டாகி அதையே உண்மையாக எண்ணி அவரது பவித்திரமான இதயம் பூரித்தது.

## 4

"எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லையம்மா! அப்பாவின் புகழும் கீர்த்தியும் காற்றில் அணையும் விளக்குபோலத்தான் ஆய்விடப்போகிறது· தருமம் தருமம், என்று பணத்தை அள்ளிவிடுவதோடு நில்லாமல் ஏதேதோ வழியில் அவர் பெயரைக் கெடுத்துக்கொள்ள வழிதேடுகிறார். தாசி காந்தாமணியின் சினேகிதம் ஏதோ புதிதாகப்பிடித்திருக்கிறாராம். அடிக்கடி அவள் வீட்டிற்குப்போகிறாராம். அவர்களைக்கொண்டு ஏதோ நாட்டிய கோஷ்டியாம்... எழவாம்...

கீர்:—(இடைமறுத்து) இதென்னடா வெட்கக்கேடு? இத்தனைவயது கழித்து தாசிநேசமா செய்கிறார்? நாட்டியகோஷ்டியின் புகைப்படமும் ஏதேதோ சமாச்சாரமும் பத்திரிகையில் வந்ததெல்லாம் இவரா ஏற்பாடு செய்திருக்கிறார். அட அனியாயக்கொள்ளையே! வயது ஆக ஆக சம்சாரப் பாசத்தைவிட்டு பகவானின் நாமத்தைச்சொல்லிக் காலத்தைக்கழிக்காமல் தாசிவீடுபோகிறாரா?...ஐயையோ! எனக்கு வெட்கம் தாங்கமுடியவில்லையே. இந்த டாக்டர் தொழிலில்தான் எத்தனையோ தாசி, எத்தனையோ வேசி, எத்தனையோ கண்ராவிகள் இருப்பது போதாது, இதென்னடா கூத்து வேண்டியிருக்கு! அவர் ஊருக்கெல்லாம் வயித்தியம்செய்வது போக, அவருக்கு வயித்தியம்செய்யும் காலம் வந்துவிடும்போலிருக்கிறதே.

சுகு:—எனக்குப்பேசவே பிடிக்கவில்லை. அப்பாவின் புத்திகூடவா இப்படியாகும் என்று என்னைப்பார்க்கிறவர்களெல்லாம் கேட்கும்போது நாக்கைப்பிடுங்கிக்கொள்ளலாம்போலிருக்கிறது. ஏழைகளுக்கு உபகாரம் என்கிற சாக்கைவைத்து ஆபத்சகாயநிதிக்குப் பணம் திரட்டுவதாகச் சொல்லிக்கொண்டு அந்த தேவடியாள் சிறுக்கியின் நாட்டியத்தை விருத்தி செய்து ஊருராய் பரப்பப் பாடுபடுகிறார் என்று ஜனங்கள் மிகவும் இளப்பமாகப் பேசிக்கொள்ளுகிறார்களாம். இவருக்கேன் இந்த தலைவிதி! தன் வேலையுண்டு தானுண்டு என்று ஏன் போகக்கூடாது! தான் கெட்டதுமின்றி சிவகுமாரனுக்கும் இப்போதுமுதல் தாசிப் பழக்கத்தை உண்டாக்குகிறார்; அவனையும் அந்த கோஷ்டியுடன் அனுப்பியிருக்கிறாராம். இந்த விபரீதம் வீட்டில் யாருக்காவது தெரியுமா! அந்த தடியன்தானாகட்டும் பெத்த தாயாராகிய உன்னிடமாவது சொன்னானா! எல்லாம் பூடகமாகவன்றோ இருக்கிறது! இந்த சிறுவதியலேயே அவன் இப்படி கெட்டுப் போவதற்கு பெத்த பிதாவே விட்டு வேடிக்கை பார்க்கலாமா!

கீர்:—சுகுமார்! நீ சொல்வதைக் கேட்கக்கேட்க என்னுடம்பு பற்றி எரிவதுபோலிருக்கிறது. தன் குட்டு வெளியாகாதிருக்க அவனையும் உளவு வைத்துக்கொண்டாரோ, என்னவோ!... எனக்கு கேட்கவே பிடிக்கவில்லையே!-என்று பேசிக்கொண்டிருக்கையில் வீதியில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு சம்பாஷணையை நிறுத்தினார்கள்.

நிஷ்களங்கமான மனத்துடன் வந்த புண்யமூர்த்தி நேரே தன் னறைக்குச் சென்று அங்கு வந்திருந்த கடிதங்களைப் படித்தார். ஒன்று சிவகுமாரனால் எழுதப்பட்டது. சென்றவிடமெல்லாம் சிறப்பு. ஒரு ஊரில் ஒரு சபாவில் கச்சேரி என்று சென்ற பிறகு நாலைந்து கல்யாண வீடுகளி லும் சபாக்களிலும் நடந்து அமோகமான வெற்றியைக் கொடுப்பதாயும், ஒரே ஒரு தியேட்டரில் மட்டும் 5000 ரூபாய் வசூலாயிருக்கிறதென்றும் எழுதியிருந்ததைப் படித்ததும் அவருடைய உள்ளம் ஆனந்தத்தில் தோய்ந் தது. கடவுளின் கிருபையை எண்ணி மனமார வந்தனம் செய்தார்.

குழந்தை நிருபமாவின் உடல் நலத்தைச் சரிவர கவனித்துக்கொள் ளும்படிக்கும் அவளுக்கு ஓய்ச்சல் உண்டாகுமானால் ப்ரயாணத்தைத் தள் ளிப்போடும்படிக்கும் எழுதினார். பின்னும் ஒருமாத காலம் எப்படியோ ஓடி மறைந்தது. எந்தத் தொழிலில்தான் போட்டியும்,பொறாமையும் இல்லா திருக்கிறது? அவரவர்களின் பாப புண்யத்திற்கு ஏற்றுப்போல் நன்மை தீமையும், புகழும் இகழும் சாருகிறது. பொறாமைப்பட்டுவிட்டால் மட்டும் என்ன செய்துவிட முடியும்?

புண்ணியமூர்த்தி ஆதியில் இத்தொழிலை ஆரம்பித்தது முதலே அவரை அதிர்ஷ்ட தேவதையும் புகழ்த் தாயும் இருகைகளாலும் ஆதரித்து ஆசீர்வதித்ததால் அவரைக் கண்டு பொறாமைப்படுகிறவர்களின் ஜம்பம் சாயவில்லை. நாட்டிய கோஷ்டியினர் ஊர் திரும்பினார்கள்...அவர்களுக்கு ஏற்பட்ட விசேஷமான கீர்த்தியும் நன்மதிப்பும் கூறத்திறமில்லை.

புண்யமூர்த்தியின் காது கேளாது யார் யார் எதைக் கூறினும் அவருக்கென்னவாயிற்று? காந்தாமணியையும், நிருபமாவையும் வெகு அன்புடன் வரவேற்று அந்த கோஷ்டியினருக்கே ஒரு பெரிய விருந்து நடத்தி மாபெருங் கூட்டம் ஒன்றுகூட்டி அவ்வூரின் ப்ரபலஸ்தரான மேயரைத் தலைமை வகிக்கச் செய்து நிருபமாவை கொஞ்சநேரம் நாட்டியம் ஆடச்செய்துப் பின் அவள் தனது சொந்த உழைப்பினாலும், சங்கீதத்தினாலும் ஏழை மக்களுக்காக ஆபத்சகாய நிதிக்கு வசூலித்த பெருந்தொகையை, செலவு போக மிச்சம் 50,000 ரூபாயை, புண்ய மூர்த்தி நிருபமாவின் கையினாலேயே மேயரிடம் கொடுக்கச் செய்தார்.

நிருபமாவின் நாட்டியத் திறமையைப் பற்றியும், அவளும் அவள் தாயாரும் இந்த புனிதமான சேவையில் முதல்முதல் ஈடுபட்டுப் பேருதவி செய்ததையும் மிக மிகச் சிறப்புடன் பாராட்டி மேயர் ப்ரமாதமாகப் பேசி நிருபமாவுக்கு ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசாக அளித்தார். அவரைச் சார்ந்து பல பேர்கள் பேசினார்கள். கூட்டத்திற்கு வந்திருந்த ஒவ்வொரு பெரிய மனிதரும் இதுகாறும் நிதிக்கு உதவாதிருந்தவர்களெல்லாம் இச் சிறுமியின் அபாரமான சேவையைப் பார்த்ததும் ஆச்சரியத்தினால் வியந்து தாமும் தம்மையறியாமலேயே உதவியளித்தார்கள்.

நிருபமாவின் புகைப்படங்களும், அவள் நாட்டியத்தின் அத்புதத்தைப் பற்றி விமர்சனங்களும் ஏராளமாக தினம் பல பத்திரிகைகளில் வந்து கொண்டே இருந்தன. டாக்டர் புண்ணியமூர்த்திதான் இந்த மகத்தான திருப்பணியை முன்னின்று செய்துவைத்ததை வெகுவாய்ப் பாராட்டி எழுதினார்கள்.

அதன் பிறகு புண்ணியமூர்த்திக்குத் தம்மை யறியாமலேயே நிருபமா விடம் ஆழ்ந்த வாத்ஸல்யமும் நன்மதிப்பும் உண்டாயின. அடிக்கடி நிரு பமாவைப் பார்க்க காந்தாமணியின் வீட்டிற்குப் போவதும் அவர்கள் இங்கு வருவதுமாகத் தலைப்பட்டார்கள்.

ஆபத் சகாய நிதியின் மூலம் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு குடிசைகள்போட்டுத் தரப்பட்டன. உடைகளை நிருபமாவின் கையினலேயே சில இடங்களில் புண்ணிய மூர்த்தி கொடுக்கச் செய்தார் குழந்தையாகிய நிருபமாவுக்கு சந்தோஷத்தால் உடல் பூரித்தது. புண்ணிய மூர்த்தியாலல்லவா நமக்கு இத்தனை மதிப்பும் சிறப்பும் உண்டாகியது என்று காந்தாமணியும் நிருபமாவும் சதா நினைத்துப் பேசுவார்கள். புண்ய மூர்த்தியின் சிறந்த உத்தமகுணத்தினழகும் அவரது பொன்மொழிகளுமே இதயத்தில் ஒலித்துக்கொண்டிருந்தன.

ஸ்ரீமதி கீர்வாணி தேவிக்கும் சுகுமாரனுக்கும் தாமாக உண்டாக்கிக் கொண்ட மனக்கசப்பு மாறவே இல்லை. சிவகுமாரனையும் அவர்கள் கண்டித்துத் திட்டவாரம்பித்தார்கள். அக்ரமமாகத் தன் பிதாவின்மீது இத்தகைய விபரீத எண்ணம் கொண்டிருப்பதை அவன் வெறுத்து அவர்களையே கண்டித்தான்.

இந்த சுற்று ப்ரயாணத்திற்குப் பிறகு நிருபமாவின் நாட்டியத்திற்கு அசாத்ய மதிப்பும் ஆதரவும் உண்டாகி தினம் ஒவ்வொரு ஜமீன் சமஸ்தானத்திலும், ராஜகுடும்பத்திலும், பெரிய பெரிய தனிகர்களின் வீட்டுக் கல்யாணத்திற்கும் அழைப்புகள் வந்துகொண்டே இருந்தன. முதல் முதல் நாட்டியக் கலையைக் கற்றுகொடுத்தபோது காந்தாமணி இதைத் தொழிலாகக் கொள்ளவேண்டும் என்கிற எண்ணத்தில் ஆரம்பிக்கவில்லை. அவள் சகோதரன் சிறந்த கைதேர்ந்த நட்டுவன். அவன் இக்குழந்தையின் கலை அபிமானத்தை அறிந்துத் தானாகக் கற்றுக் கொடுத்ததானது, சிறுவிதையே பெரும் விருக்ஷமாவதுபோல் அபாரமான புகழைத் தானே கொடுத்துவிட்டது கண்டு அவனே வியப்புற்றான். விளையாட்டாக ஆரம்பித்த ஒரு நாட்டியம் பெரும் பயனைக் கொடுத்தபோது காந்தாமணியின் உள்ளம் பூரித்தது.

ஆனால் திடீரென்று தன் சகோதரனாகிய நட்டுவனார் காலமாகிவிட்ட பிறகு அவளுக்கு இடுப்பு ஒடிந்ததுபோலாயிற்று. அதோடு இத்தகைய அழைப்புகளைப் பார்க்கும்போது அவளுக்கு ஏதோ கூறத்திறமற்ற சங்கடம் செய்ததேயன்றி உத்ஸாகமோ, த்ருப்தியோ உண்டாகவில்லை. நிருபமாவின் அதியத்புதமான சௌந்தர்ய பிம்பத்தின் வளர்ச்சியைக் காணக் காண அவளுக்கு உள்ளுக்குள் ஏதோ சித்திரவதை செய்கிறது. தன்னினத்தாரே இக் குழந்தையைக் கொன்றுவிட அஞ்சமாட்டார்கள் என்பது அவள் எண்ணம்.

தன் சகோதரன் இறந்த துக்கம், அவள் இதயத்தில் ஏதோ ஒரு சங்கடம் செய்யும் மர்மம் இரண்டும் ஒன்றுசேர்ந்து அவளைக் கடுமையான நோயாளியாக்கி க்ஷயத்தில் வைத்துவிட்டது.பின்னும் சில மாதங்களிலேயே அவள் உடல் நலம் கேவலமாகிவிட்டது. இதையே ஓர் காரணமாக வைத்து நாட்டியத்திற்கு ஒப்புக்கொள்ள மறுத்தாள்.

புண்ணியமூர்த்தியும் எத்தனையோ ஜாக்ரதையாகக் கவனித்தும் காந்தாமணியின் வ்யாதி குணமாகும் வழியில் வரவே இல்லை. அவளுக்கு வெறும் வ்யாதிமட்டுமிருந்தால் தேவலை. மனோவ்யாதி, ஏதோ ஒரு பயங்கரமோ, மர்மமோ அவள் இதயத்தை உருக்குகிறது என்பதை எளிதில் புண்யமூர்த்தி அறிந்துகொண்டார். அவர் வார்த்தைப் பராக்கில் என்ன பேசியும் விவரம் ஒன்றையும் அறியக்கூடவில்லை.

பின்னும் சிலதினங்களில் காந்தாமணி இறந்துவிடுவாள் என்பது டாக்டருக்குத் தெரிந்துவிட்டது. விசனமோ கவலையோ ஒன்றுமே அறியாது சுதந்திரப் பாவை போலிருந்த நிருபமாவுக்குத் தனது மாமன்

இறந்த பிறகே சற்று வருத்தம் தோன்றியது. தாயாரும் படுத்துவிட்ட பிறகு.. அதிலும் படுக்கையோடு படுக்கையாக ஆனபிறகு அவளது அபூர்வ சோபை நிறைந்த மான்விழிகளில் தவழ்ந்த ஒரு மின்வெட்டு சௌந்தர்ய வேகம் குன்றி சோகமும் ஏக்கமும் குடி புகுந்தன.


டாக்டர் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அவள் "அம்மாவுக்கு பயமில்லையே...எப்படியிருக்கிறது!" என்று கண்ணீருடன் கேட்பாள். முதலில் தேறுதல்கூறிய டாக்டர் பிறகு நாளாக ஆக "பகவானை வேண்டி ப்ரார்த்தனை செய்யம்மா! குணமாகிவிடும்" என்று சொல்லவாரம்பித்ததும் சிறுமியின் தலையில் செம்மட்டியாலடிப்பதுபோலாயிற்று. தன் தாயாருக்கு ஏதோ ஆபத்தான வ்யாதிதான் வந்துவிட்டதென்று நன்றாகத் தெரிந்து போயிற்று. அதற்குப் பிறகு தாயாரைவிட்டு ஒரு க்ஷணங்கூடப் பிரியாமல் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பாள்.

காந்தாமணிக்கோ துக்கம் துக்கமாக் வருகிறதே யன்றி செய்வது இன்னதென்றே தெரியவில்லை. அன்று அவளை யறியாத ஒரு படபடப்பு; சங்கடம். விநாடிக்கு விநாடி அவள் இதயத்தில் ஏதோ ஒன்று ஒலித்து திடும் திடும் என்று நடுக்குகிறது. தனது முடிவு அவளுக்கு வெகு நன்றாகத் தெரிந்துவிட்டது. தன் அருமைக் கண்மணி நிருபமாவைப் பார்க்கிறாள்; அழுகிறாள். அவளைப் பார்த்துக் குழந்தை குலுங்கக் குலுங்க அழுகிறாள். காந்தாமணி சற்று சமாளித்துக்கொண்டு நிருபமாவைத் தேற்றிப்பின், "கண்மணீ! ஒரே ஓட்டமாக ஓடி நமது புண்ணிய மூர்த்தியை நான் கூப்பிடுவதாகக் கையோடு அழைத்துவா...அப்படியே நமது வக்கீல் சீதாராமய்யருக்கும் ஆளை அனுப்பு" என்றாள்.

நிருபமா நடப்பது தெரியாமல் காற்றாடியாகப் பறந்து சென்று புண்ணியமூர்த்தியுடன் வந்தாள். காந்தாவுக்கு ச்வாசம் கண்டுவிட்டதையும் குழந்தையின் பரிதாபத்தையும் கண்டு அவருக்கே தாங்காமல் கண்ணீர் முட்டிவிட்டது. "நாட்டிய கலா சுந்தரி" என்கிற பட்டத்தை இத்தனை சிறிய வயதில் பெற்றுள்ள பெண்ணின் புகழை இன்னும் சிறிதுகாலம் கண்டு களிக்காது கண்மூடப்போகிறாளே பாவி"...என்ற துக்கம் காந்தாமணியைச் சேர்ந்த சிலருக்குத்தான் தோன்றியது. நிருபமாவை இவளுக்குப் பின் ஆதரிக்க காந்தாவின் சிறியதாயாராகிய ஒரே ஒரு கிழவிதான் இருக்கிறாள். அவள் ஒரு மூலையில் புலம்புகிறாள் பாவம்.

டாக்டரைப்பார்த்ததும் காந்தாமணியின் கண்களில் நீர் மளமளவென்று வந்துவிட்டது. "டாக்டர்! என் செல்வக்கிளி...என்னுருயிர் நிருபமாவைப் பிரியப்போகும் காலம் நெருங்கிவிட்டது"...என்றாள். மேலேபேச நாவெழவில்லை. நிருபமாவின் கையைப்பிடித்துக்கொண்டு டாக்டரை இமை இலைசக்காமல் பார்த்தாள். நிருபமாவின் கண்களில் நீர் சொரிகிறது. டாக்டருக்கும் ஒன்றுமே தோன்றாது போயிற்று. அவருடைய இளகிய மனது பின்னும் கரைந்துருகியது. இம்மூவருடைய தவிப்பையும் வெயர்வையையும் போக்கி ஆச்வாசப்படுத்துவதற்காக வந்ததுபோல் ஜன்னலால் சிலுசிலுப்பான மந்தமாருதம் திடீரென்று வீசியது.

திடீரென்று டாக்டர் வந்திருப்பதை யறிந்த காந்தாவின் சிறிய தாயாராகிய கிழவி இங்கு ஆவலுடன் ஓடிவந்து, "டாக்டர்!...டாக்டர்! என்னமா இருக்கிறது? நான் பெண்ணில்லாத பாவி. பெண்ணுக்குப் பெண்ணாக இவளைத்தான் நான் நம்பி இருக்கிறேன். என் நினைப்பில் மண்ணைப் போட்டு என்னைத் துடிக்கச் செய்துவிடுவாள்போலிருக்கிறதே!...என்று வாத்ஸல்யத்தின் மிகுதியினால் கதறிவிட்டாள்.



எத்தனைதான் கைதேர்ந்த கெட்டிக்கார டாக்டராயிருந்தாலும். கைராசிக்காரராக இருந்தாலும்... அவரவர்களின் தலையில் எழுதியுள்ள ஆயுள் கணக்கை மாற்றி தீர்க்காயுஸாகச் செய்ய முடியுமா ?... கிழவியின் துடிப்பின் உச்சஸ்தாயி அவருக்குத் தெரியாமலில்லை. ஆனால் என்ன பதில் சொல்லமுடியும் ? மவுனமே சாதித்தார்.

இதற்குள் மற்றொருத்தி வந்து கிழவியை உள்ளே அழைத்துச் சென்று தேறுதல் கூறினாள். காந்தாமணியின் வாயடைத்து மவுனமே குடிகொண்பது. ஆனால் கண்ணீரின் அருவியை நிறுத்த அவளுக்குச் சக்தி ஏது?

## 5

“சிவகுமார் ! இங்கு வா. நான் உன் பெற்ற தாயார் என்கிற ஹோதாவில் சுதந்தரமாகக் கேட்கிறேன். அப்பாவுக்கு இத்தனை வயதாகிய பிறகு அவர் பெயர் கெட்டு ஊர் சிரிப்பதையும் பலவிதமாகப் பேசிக் கொள்வதையும் என்னால் சகிக்கவே முடியவில்லை. இவர் செய்துவந்த தருமங்களென்ன ! இவர் இப்போது நடக்கும் மாதிரி என்ன ?” என்று

வெகு ஆத்திரத்துடன் ஆரம்பிப்பதைக் கேட்டு ஆத்திரம் பொங்கியது. சிவகுமாரன் "அம்மா! அப்பாவுக்கு தர்மபத்தினியாயமைந்த உனக்கா இப்படி புத்தி தடுமாறுகிறது? நீயா இம்மாதிரி பேசி அப்பாவின் பெயருக்குக் களங்கத்தை உண்டாக்குவது? சேச்சே!... சற்றும் நன்றாக இல்லை. அம்மா! இன்னொருதரம் இம்மாதிரி மகா உத்தமரான அவர்மீது அபாண்டப் பழியை உன் வாயிலாகச் சொல்லாதே... ஆயிரக்கணக்கான ஏழைகளின் உள்ளங்களை மகிழவைத்த மாபெரும் காரியத்தை நீ அறியவில்லையா!"... என்று அழுத்தமாகக் கூறினன்?

கீர்:—ஆமாண்டா! அப்பாவுக்குப் பரிந்து கட்ட நீதான் பிறந்திருக்கிருய். எங்களுக்கு ஏதாவது அக்கரை உண்டா! இளங்கன்று பயமறியாது என்பதுபோல் நீ நடக்கிருய். அந்த தேவடியாள் வீட்டில் அடிக்கொருதரம் அவருக்கென்னடா வேலை! அதோடு அந்தத் தேவடியாள் சிறுக்கியை தனக்குச் சமமாகச் காரில் வைத்துக்கொண்டு போகிருராமே. இதென்னடா வெட்கக்கேடு! தருமமும் தானமும் செய்யும் மனிதருக்கு இதெல்லாம் என்ன ப்ரவர்த்தகம்.

இந்தமாதிரி நடந்தால் ஊர்சிரிக்காமல் என்னடாசெய்யும்? அவரோடு நீயும் கெட்டுக் குட்டிச்சுவராகிவிடுகிருயே என்று என்வயிறுகொதிக்கிறது. உன் அண்ணன் தவியாய்த்தவிக்கிருன், ஊர்சிரிப்பது போதாமல் உற்ருரும் சிரிக்கும்படியானகாலம் வேறு வந்துவிட்டது. உன் மாமன் ஸ்ரீகாந்தன் கண்மறைவாக எங்கேயோ டில்லியில் இருந்தான்; இப்போது அவனை காப்டன் என்கிற பட்டத்துடன் இந்தியாவுக்கு வெளியேடாக்டராக மாற்றிவிட்டார்களாம்; அவனுடைய ஒரே பெண்ணுகிய லலிதகுமாரியை இங்குதான் விட்டுவிட்டுப்போகப்போவதாக இதோகடிதம் எழுதியிருக்கிருன். தாயில்லாக் குழந்தையை இத்தனைநாள்தான், தானே வைத்துக்கொண்டு தடமாடினன். அவளுக்கு வயதாகிவிட்டது. அவள் பிறந்தது முதல்கொண்டு நம்ப சுகுமாரனுக்குத்தான் அவளை விவாகம் செய்வது என்று சொல்லிக்கொண்டிருக்கிறேம்; அவளுடைய தாயார்தான் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டாள். நம்ம குழந்தை நம்ம வீட்டிற்குவந்து சேர வேண்டும். அவள் கண்முன்பு நீயும் உன் பிதாவும் இப்படிக் கூத்தடித்தால் அதைவிட அவமானம் வேறு என்ன வேண்டும்?...

என்று அவள் தன்போக்காகச் சொல்லிக்கொண்டிருந்ததை சிவகுமார் காதிலேயே வாங்கவில்லை. ஏனெனில் அவனுடைய மாமாவையும் அவன் நடத்தையையும் கண்டால் இவனுடைய தகப்பனருக்கு அடியோடு பிடிக்காது. அப்போதுதான் கப்பலிலிருந்து இறங்கிய அசல் வெள்ளைக்காரரைப்போல் அவர்கள் நடை உடை சாப்பாடு சகலத்திலும் நடப்பதையும், இந்து தர்மத்தின் லக்ஷணத்தை ஒரு இம்மியளவுகூட மதிக்காமலும் நினைக்காமலும் தான்தோன்றியாகவும் நாஸ்திகராகவும் திரிவதையும் புண்ணியமூர்த்தி மிகவும் வெறுத்தார். அதே போலத்தான் சிவகுமாரும்.

வயதான பெரிய பெண்ணுக்குத் தலையை பாப் செய்து கவுன் போட்டுவளர்க்கும் கண்றாவியை அவரால் சகிக்கமுடியாது பலதரம் பாவாடை, புடவை கட்டும்படிச்சொல்லியும் மாமா அதை லக்ஷியம் செய்யாது கேவலம் ஆண்பிள்ளைபோல் அந்தப் பெண்ணைப் பழக்கிவந்தார். அத்தகைய நாகரிக ராணி வீட்டிற்கே வரப்போகிருள் என்பதை அறிந்து அவன் வெறுத்து, பேசாமல் போனதை கீர்வாணி மிகவும் க்ரோதமாக எண்ணினள், அதே சமயம் சுகுமாரன் ஒரு தந்தியைத் தூக்கிக்

கொண்டு தாயாரிடம் ஓடிவந்து, "அம்மா! மாமா தந்தியடித்திருக்கிறார். இன்று வண்டிக்கே லலிதகுமாரியுடன் புறப்பட்டுவிட்டாராம்.

மாமா மிகவும் நாகரிகப் பேர்வழி அவர்க்குத் தகுந்தாற்போல் இட வசதிகளும் மற்ற சவுகரியங்களும் செய்ய வேண்டாமா! அப்பா ஒன்றையுமே காதில் போட்டுக்கொள்ளமாட்டார். எதற்கும் தனக்கு ஒப்பில்லை என்கிற பல்லவியைத்தான் பாடுவார். லலிதகுமாரியுடன்கூட அவளுடைய தாதியும் குடும்பத்துடன் வருகிறாளாம். நமது சிறிய பங்களாவை (அவுட்ஹவுஸ்) ஒழித்துவைக்கவேண்டாமா!" என்றான்.

கீர்:—நானே நினைத்துக்கொண்டுதானிருக்கிறேன். மாமா ஒருமாதம் இங்கிருந்து பின் கப்பலேறிப்போவதாகவும் அதற்குத் தனிவிடுதி அவசியம் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறான். என்னவோ! தாய்நாட்டிலேயே இருந்தவரையில் வருஷம் ஒரு முறையாவது அவளைப் பார்த்துச் சந்தோஷப்பட்டேன். அதுவும் இனி அரிதாகிவிட்டது. பாழாய்ப்போன சண்டையில் எங்கு அனுப்பிவிடுவார்களோ என்ன ஆகுமோ! என்கிற கவலையாகவே இருக்கிறது. உங்கப்பாவை நீ எதிர்பார்க்கவேண்டாம். வேண்டிய காரியங்களை நீயே செய்துவிடு. இன்றே வீடு பூராவும் வெள்ளையடிக்கச் சொல்லு. உனக்கும் எனக்குந்தானே அக்கரை. உன் மனைவியாகப் போகும் லக்ஷ்மி வருவதால் நீதான் செய்யவேண்டும்—என்றாள்.

சுகுமாரன் முகம் மலர்ந்து ஆனந்தம் ததும்பியது, உடனே ஓடினான். கிர்வாணியம்மாளின் கவலைமுற்றும் தன் கணவனைப்பற்றிய சூழல்களைத் தம்பி நேரில் பார்த்துவிட்டால் தன் மகனுக்கு லலிதகுமாரியைக்கொடுக்க இசையாவிடில் என்னசெய்வது? திரண்ட ஐச்வர்யமும் அழகானபெண்ணும் தவறிவிடாதிருக்கவேண்டுமே. லலிதகுமாரியின் தாயார் இறக்கும்போதுகூட "அக்கா! லில்லியை (அவள் தாயார், அப்படித்தானழைப்பாள்) சுகுமாரனுக்கே மணம்செய்வியுங்கள்" என்று வாஞ்சையுடன் கூறியது இப்போதும் இதயத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அதேபோல் நடத்திப்பார்த்துவிட்டால் போதும் என்று நினைத்தாள்.

வீட்டை ஒழுங்குபடுத்துவதிலும் ஆட்களை அதட்டி வேலைவாங்குவதிலும் தாயும் மகனும் முனைந்தார்கள். புண்ணியமூர்த்திக்கு விஷயம் தெரியாமலில்லை. வருகிறானா வரட்டும், போகிறானா, போகட்டும், என்கிற வரையில் தன் மைத்துனன் விஷயத்தில் இருந்தார்.

அன்றுதான் காந்தாமணியின் உடம்பு அதிகமாகிவிட்டதையறிந்து மிக்க மன வருத்தத்துடன் வந்து உட்கார்ந்தார். அச்சமயம் கிர்வாணி அவர் முன்பு தோன்றி, "தந்தியைப் பார்த்தீர்களா?" என்றாள்.

புண்ய:—ஆகா! பார்த்தேன். ரொம்பவும் சந்தோஷம்.

கீர்:—சந்தோஷம் என்று கூறிவிட்டால் ஆய்விட்டதா? அவனுக்கென்ன சௌகர்யங்களைச் செய்யவேண்டாமா? அவன் இப்போது வந்துபோனால் பின்பு எப்போது வருவானோ? அவனுடன்கூட இருப்பதற்கு நீங்கள் வேலைகளைச் சரிக்கட்டவேண்டாமா!.

புண்ய:—கூடவே இருப்பதா?...கூட்டி இல்லாமல் எங்குபோய்விடுவேன்? அதற்காக என்ன செய்யவேண்டுமென்கிறாய்! அவனும் என்னைப் போல்...இல்லை...இல்லை...என்னைவிட பெரிய டாக்டர். நாகரீகத்தைக் கரைகண்டவன், யாராவது நாட்டுப்புறத்தார் வந்தால் அவர்களை சினிமா; ட்ராமா, ம்யூஸியம், பீபில்ஸ்பார்க்கு...முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுவது ஒரு சம்பிரதாயம். அப்படி இவனுக்கு வேண்டுமா?